
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜனவரி – 2000
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



கி.பி.2000

## தொழில்நுட்ப புரட்சியா தொழிலாளி வர்க்கப் புரட்சியா?

படிப்பகம்

www.padippakam.com

# கம்யூனிசமே வெல்லும்

சீனப் புரட்சியின் 50-ஆவது ஆண்டை நினைவு கூர்ந்து 17.11.99 அன்று தஞ்சையில் நடைபெற்ற கவியரங்கத்தில் படிக்கப்பட்ட கவிதைகளின் சில பகுதிகள்:

## பார்ப்பனீய வெப்பமானி

என்று தருவார்கள்
பறைகள் தட்டும்
விரல்கள் மீட்ட
தம்புரா?
எப்போது நுரைக்கும்
சக்கிலியன் சவுக்காரம்
படையாச்சிப் படித்துறையில்?

இராகுகாலம், எமகண்டம், குளிகை
இப்படி எந்தநேரமும் பார்ப்பதில்லை
பள்ளனென்றும்
பறையனென்றும்
எள்ளி நகையாடும்
பல எமகண்டப் புள்ளிகள்.

அன்று
பண்ணைகளின் கண்ணியில்
அரிசனக் குருவிகள்
மிராசின் கால்களில்
மிதியடிகளாய் வெண்மணியில்.

இன்று
தேநீர் கடைகளில்
தனித்தனி குவளைகள்

சொல் மனிதா!
அகமுடையார் டஸ்ட் டீ
வெள்ளாளன் டஸ்ட் டீ
நாயக்கர் ஃபில்டர் காபி
எங்காவது உண்டா?

●

கதறக் கதறப் பாய்ந்தது
தேசபக்த இந்திரியம்.
மதமாற்றத் தடயங்களை
இவர்கள்
கிருத்துவ, இஸ்லாம் பெண்களின்
உறுப்புகளிலா தேடுகிறார்கள்?
பார்ப்பனீய வெப்பமானி உயர
விநாயகர் ஊர்வலத்தில்
உஷ்ணம் ஊட்டப்படுகிறது.

— மணிக்கோ

## சில மரணங்களும் ஒரு வாழ்க்கையும்

உனக்கு இது
எத்தனையாவது மரணம்?

மரணத்துடனான
முதல் சந்திப்பு
உன் கருவிலேயே நேர்ந்தது
எத்தனை பேருக்குத் தெரியும்?
இரண்டே வழிகள்தாம்!
உன்னை
மண்தோண்டிப் புதைப்பதா?
மரபுகளுக்குள் புதைப்பதா?

பின்னது ஒப்புக் கொள்ளப்பட்டதால்
பிறந்தாய் நீ!
ஒரு நாள்
குறுத்தோலைக் குடிசைக்குள்
குந்தியிருந்தாய்!
நீ மறந்திருக்க மாட்டாய்!

உன் மரணத்தை
உன்னெதிரிலேயே
கொண்டாடிய பயங்கரம்
நீ மறந்திருக்க மாட்டாய்!

அடக்கம்! அடக்கம்!
தனக்குள் தான்முடங்கும்
சவஅடக்கம் பழகிக் கொண்டாய்!

ஒரு மங்கள நாளில்
உனது கல்யாணம்

அன்று கைமாறின
சாட்டைக் கயிறுகள்
மூக்கணாங் கயிறுகள்
அடையாளமாய்
ஒரு தாலிக்கயிறு

தோழி!
பூக்களாலும்
கண்ணீர் துளிகளாலும்
உம் மரணத்தைக்
கௌரவித்துவிட முடியாது.

— தீபன்

## எப்போது பிறக்கலாம்?

(''முறியடிப்பு'' என்ற ரசிய நாவலில் வரும் ''மரோஸ்கா'' என்ற கதாபாத்திரத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட கவிதை)

தைகாக்காடுகள்
தன்னை தத்தெடுத்தபோதுதான்
அவன் பிறந்ததை
அவனே உணர்ந்தான் மரோஸ்கா.

அப்படியென்றால்
அவனைப் பிரசவித்தது எது?

கேவலம்
முலாம்பழம் திருடிய
குற்றத்திற்காக
மக்கள் மத்தியில்
தன் சகபடை வீரராலேயே
அவமானப்படுத்தப்பட்டாலும்
தன் தவற்றை
தானே உணர்ந்து
மன்னிப்பு கேட்குமளவுக்கு
மரோஸ்காவை மாற்றியது
எது?

எதிரிப்படையின் வரவை
எச்சரிக்க
முன்னால் சென்ற மேச்சிக்
பின்வாங்கி ஓடிவிட்டான்.

அட, இருந்தும்
பரவாயில்லை
தன் உயிரைப் பற்றிக்
கவலைப்பட வேண்டாம்
என்று அவன் தோளில்
தட்டிக் கொடுத்தது
எதுவாக இருக்க முடியும்?
''கம்யூனிசத்தைத் தவிர''

''அதெல்லாம்
இங்க முடியாது
அது....
ரஷ்யா
அது... வந்து... சீனா
அந்த ஜனங்க வழி வருமா?
நம்ப ஆளுங்களுக்கு
அவ்வளவோ
வீரம்லாம் கெடையாதுங்க.''
சொல்லிச் சொல்லியே
செத்து விட்டோம்.

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 17
• குரல்: 8
• ஜனவரி - 2000

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# பணயக் கைதிகளும் தேச 'பக்தர்'களும்

விமானக் கடத்தலுக்காகப் பலரும் அரசைக் கண்டித்திருக்கிறார்கள். விமான நிலையத்தில் சோதனை சரியில்லை, உளவுத்துறை சரியில்லை, அமிர்தசரஸில் விமானத்தைத் தடுக்கத் தவறிய காவல்துறை சரியில்லை போன்ற பல காரணங்களுக்காக இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாமும் அரசைக் கண்டிக்கிறோம். ஆனால் வேறு காரணங்களுக்காக. காஷ்மீர் மக்களுடைய தன்னுரிமையை மறுத்து, அவர்கள் மீது அரச பயங்கரவாதத்தை ஏவிவிட்டு அதன் எதிர்வினையாக இசுலாமியத் தீவிரவாதத்தைத் தூண்டி விட்டிருப்பதற்காக நாம் அரசைக் கண்டிக்கிறோம். மோசடியான 'தேசபக்தி'யைத் தூண்டி இந்திய மக்களை ஏமாற்றுவதற்காகவும், நிரந்தரமான ஒரு யுத்தத்திலும் நெருக்கடியிலும் பயங்கரவாதத் தாக்குதல் அபாயத்திலும் நாட்டைத் தள்ளியிருப்பதற்காகவும் நாம் அரசைக் கண்டிக்கிறோம்.

காஷ்மீர் போர்தான் காண்டகாரில் வேறொரு வடிவத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தக் கடத்தல் பரிசீலனை முடிந்தாலும், காஷ்மீர் பிரச்சினை ஜனநாயக பூர்வமான முறையில் தீர்க்கப்படும் வரை இத்தகைய பிரச்சினைகளிலிருந்து இந்திய அரசு தப்பிக்கவே முடியாது.

கார்கில் போரில் இறந்த சிப்பாய்களுக்குக் காணிக்கை செலுத்திய 'தேச பக்தர்கள்', தங்கள் உறவினர்களின் உயிரைத் தேசத்துக்குக் காணிக்கையாக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டவுடன் கொதித்தெழுகிறார்கள், பத்திரிகைகளும் இவர்கள் பக்கம்தான். ''கத்யாலின் மரணம் தேசத்தின் மனச்சாட்சியில் பதிந்துவிட்டது'' என்று தலையங்கம் எழுதுகிறது 'இந்து.' போலிசால் கைது செய்து கொல்லப்பட்ட மக்கள் யுத்தக் குழுவின் மத்தியக் கமிட்டித் தோழர்கள் மூன்று பேரின் மரணம் இவர்களுடைய மனச்சாட்சியில் பதியவில்லை. ''அப்பாவிகளைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைப்பது நியாயமா'' என்ற கேள்வியை, இதையே தன் அன்றாட நடைமுறையாகக் கொண்டிருக்கும் போலீசிடம் இவர்கள் கேட்டதில்லை.

ஜஸ்வந்த் சிங் நடத்திய பத்திரிகையாளர் கூட்டத்தில் அதிரடியாக நுழைந்த பணயக் கைதிகளின் உறவினர்கள், அதைவிடஅதிரடியான கேள்விகளைக் கேட்டுள்ளனர். ''மவுலானா அசாரை விடுதலை செய்தால் உங்கள் கவுரவம் போய்விடுமா? அசாரைப் பிடித்து வைத்திருந்தால் காஷ்மீர் பிரச்சினை தீர்ந்து விடுமா?'' ஜஸ்வந்த் சிங் வாயே திறக்கவில்லை. வேறுசிலர் பிரதமர் வீட்டு வாயிலை மறித்தனர். வாஜ்பாயி வெளியூர் சென்றுள்ளார் என்று கேள்விப்பட்டவுடன், ''தேசமே நெருக்கடியான சூழலில் இருக்கும்போது பிரதமருக்கு என்ன சுற்றுப்பயணம்?'' என்றார் இன்னொருவர்.

இதுதான் பா. ஜனதாவின் அன்பிற்குரிய மேல்தட்டு வர்க்கம், நடுத்தர வர்க்கம். கார்கில் போரின் போது பா. ஜனதா கிளப்பிய தேச வெறியில் நாடு முழுவதும் சாமியாடிய வர்க்கம் இவர்கள்தான். ''அசாரை விடுதலை செய்ய கவுரவம் பார்க்காதீர்கள்'' என்பவர்கள் ''காஷ்மீருக்கு விடுதலை கொடு - கவுரவம் பார்க்காதே'' என்று சொன்னதில்லை. ''அசாரைப் பிடித்து வைத்திருந்தால் காஷ்மீர் பிரச்சினை தீர்த்து விடுமா?'' என்று கேட்பவர்கள் ''கார்கிலைப் பிடித்துவிட்டால் காஷ்மீர் பிரச்சினை தீருமா?'' என்று கேட்கவில்லை. ''தேசமே இக்கட்டில் இருக்கும் போது பிரதமருக்கும் சுற்றுப் பயணம் எதற்கு?'' என்று கேட்பவர்கள் யாரென்றால், நேபாளத்துக்கு உல்லாசப் பயணம் போன பயணிகளின் உறவினர்கள்.

இன்னொருபுறம் கார்கில் போரில் உயிர்நீத்த இராணுவ வீரர்களின் மனைவிமார்கள் பிரதமரைச் சந்தித்திருக்கிறார்கள். ''எங்கள் கணவன்மாரின் தியாகம் வீண் போய்விடக் கூடாது. என்ன ஆனாலும் சரி, கடத்தல்காரர்களின் கோரிக்கை எதையும் ஏற்கக் கூடாது'' என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். ''சிறையிலிருக்கும் ஒவ்வொரு தீவிரவாதியையும் பிடிப்பதற்காகப் பல சிப்பாய்கள் உயிர் துறந்துள்ளனர். இந்நிலையில் அவர்களை விடுவித்தால் இராணுவத்தினர் வெறுப்படைந்து விடுவர்'' என்று இலேசாக எச்சரிக்கை விடுத்திருக்கின்றன இராணுவ வட்டாரங்கள். ''பச்சைச் சட்டை போட்டவன்தான் தேசத்துக்காக உயிரைத் தர வேண்டும் என்று தலையெழுத்தா'' என்று 'பச்சையாக'க் கேட்காவிட்டாலும் அதுதான் சிப்பாய்களின் சிந்தனையோட்டமாக இருக்கும்.

உடுக்கடித்து சாம்பிராணி போட்டு தேச பக்தியை வரவழைக்க முடியாதென்பதை இந்து மதவெறிப் பண்டாரங்கள் புரிந்து கொள்ளட்டும். இட்லரிடமிருந்து தம் தாய்நாட்டைக் காப்பதற்காக இரண்டு கோடி ரசிய மக்கள் உயிரைக் கொடுத்தார்கள். ''நான் எதற்காகச் சாக வேண்டும்?'' என்று அங்கே யாரும் கேட்கவில்லை. காரணம் அவர்களது யுத்தம் நீதியான யுத்தம். இந்தியாவின் காஷ்மீர் யுத்தம் அநீதியானது. பணயக் கைதிகளின் துன்பத்தில் நாம் மகிழ்ச்சி கொள்ளவில்லை; ஆனால் கடந்த பத்தாண்டுகளாகக் காஷ்மீரில் சுட்டு வீழ்த்தப்படுபவர்கள் காக்கை குருவிகள் அல்லர், அவர்கள் மண்ணின் மைந்தர்கள் என்ற உண்மையையும் இன்று பணயக் கைதிகளுக்காகக் கண்ணீர் விடுபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com

அட்டை ஓவியம்
மருது



**1967 சீனாவின் ஹார்பின் மாநிலத்தில் நடைபெறும் புரட்சிகர கலை நிகழ்ச்சி**

## அட்டைப்படக் கட்டுரை:

# 21-ஆம் நூற்றாண்டிலா இப்படி?

பொருளின்றி உச்சரிக்கப்படும்
சில சொற்கள் உண்டு.
எனினும் அவை
பொருளற்ற சொற்களல்ல.

''இருபதாம் நூற்றாண்டிலுமா
இப்படி?'' — என்ற
வியப்புக்குறி இத்தகைய ரகம்.

சாதிப்படுகொலை
மதக்கலவரம்
வரதட்சிணைக் கொலை
உடன்கட்டையேற்றம் -
போன்ற
சமூக ஒடுக்குமுறைகளானாலும்....

நரபலி, தீமிதி
சோதிடம், வாஸ்து சாத்திரம்
சாய்பாபா, சிவசங்கர் பாபா
போன்ற
மூட நம்பிக்கைகளானாலும்....

கல்வியறிவின்மை
மருத்துவ வசதியின்மை
குடிநீர்ப் பஞ்சம்
பட்டினிச்சாவு
போன்ற
வர்க்கச் சுரண்டல்களானாலும்....

மரண தண்டனை
துப்பாக்கிச் சூடு
காவல்நிலையக் கொலை
போன்ற
அரசு ஒடுக்கு முறைகளானாலும்....

இதே கேள்வி
இருபதாம் நூற்றாண்டிலுமா இப்படி?

கேட்பவர்கள்
பாதிரியார்களாகவும்
கேட்கப்படுவது
பரிசுத்த ஆவியாகவுமிருந்தால்
கேள்வி நியாயம்தான் -

கேட்பவர்கள் அறிவாளிகள்
கேட்கப்படுவதோ - பாவம்
நாட்காட்டி!

நாள் என் செய்யும்?
நாட்காட்டி என் செய்யும்?

டிசம்பர் - 31 இரவு
தனது கடைசி காகிதத்தையும்
உதிர்த்த நாட்காட்டி
''யாமிருக்க பயமேன்'' என்று
இரண்டு துருப்பிடித்த
ஆணிகளை மட்டுமே
தனது பதிலாக நீட்டுகிறது.

2000 ஆண்டுகள்
முடிந்துவிட்டன
அதற்கென்ன?

தனது அநாகரிகக் கொள்ளைக்கு
'எத்தனை ஆண்டுகள்' - என்று
எண்ண வேண்டிய
ஜெயலலிதா
'இந்திய நாகரீகத்திற்கு
5000 ஆண்டு' - என்று
கணக்குச் சொல்கிறார்.

'கிளிண்டனே மீட்பன்' என்று
தேவஊழியஞ் செய்யும்
ஆர்.எஸ்.எஸ். அடிமைகளோ
பரிதாபத்துக்குரிய கிறிஸ்துவைக்
காலனியாதிக்கவாதியாக்குகிறார்கள்.

கலியுகத்திற்கு
5101-ஆம் ஆண்டு என்று
பஞ்சாங்கத்தை நீட்டுகிறார்கள்.
அட்டையில்
பார்ப்பனப் பாம்பு சீறுகிறது.

5000 ஆண்டுகளாகவே இருக்கட்டும்.
அதற்கென்ன?

பூச்சியங்கள் என்ன செய்யும்?
பூச்சியங்களின் மாயக்கவர்ச்சியில்
கணிதம் மயங்கலாம்
வரலாறு மயங்குவதில்லை.

மனித குலத்தின்
வரலாற்று நெடுஞ்சாலையில்
தப்பிப் பிழைத்த ஒரு மைல்கல்
கிறிஸ்து சகாப்தம்.

சாலிவாகன சகாப்தம்
விக்கிரம சகாப்தம் - எனத்
தங்கள் திருப் பெயரால்
கல்லை நட்ட கோமாளிகளின்
நடுகற்களையும் காணவில்லை.

திருச்சபையின் ஆட்சியை
முடித்து வைத்த மூலதனம்
ஆண்டவருக்கு வழங்கிய
மானியம்
''கிறிஸ்து சகாப்தம்.''

● ●

கி.பி. 2000!
பூச்சியங்கள் கூடக்கூட
மனிதகுலத்தின்
முன்னேற்றம் கூடுமெனில்
வயது கூடினால் மனிதனின்
அறிவும் கூட வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டிலா இப்படி
என்ற வியப்புக்கு விடை -
அறிஞர் பெருமக்களே,
இருபதாம் நூற்றாண்டில்தான் இப்படி!

தங்கம், வெள்ளி, வைரம்
இரும்பு, செம்பு, துத்தநாகம்



படிப்பகம்

www.padippakam.com

யுரேனியம், கோபால்ட் - போன்ற
அனைத்து உலோகங்களையும்
நெல், வாழை, கரும்பு
சோளம், காப்பி
என்றனைத்துப் பயிர்களையும்
விளைவிக்கும் - சயர்[1]
பிச்சைக்கார நாடு.

இவையெதுவுமில்லாத
ஜப்பான்
பணக்கார நாடு.
இருபதாம் நூற்றாண்டில்தான்
இது சாத்தியம்.

வானம் பொய்த்த போது
மனிதர்கள்
பஞ்சத்தால் செத்திருக்கிறார்கள்.

கறந்த பாலை சாக்கடையிலும்
விளைந்த கோதுமையைக் கடலிலும்
கொட்டிவிட்டு
ஆண்டுக்கு
150 லட்சம் மனிதர்களைப்
பட்டினி போட்டுச் சாகடிப்பது
இருபதாம் நூற்றாண்டில்தான்.

கொள்ளை நோய்களுக்கு
மருந்து தெரியாமல்
மக்கள் மடிந்த நூற்றாண்டுகளுண்டு.
மருந்து வியாபாரிகளின்
கொள்ளையால்
மக்கள் மடிவது
இருபதாம் நூற்றாண்டு.

துன்பத்தால் துடிக்கும் நோயாளியின்
சட்டைப்பையைத்
துழாவியிருப்பாரா ஹெராக்ளிடஸ்?[2]
கையைப் பிடிக்குமுன்
பையைப் பிடித்துப் பார்க்கிறார்கள்
அவரது
இருபதாம் நூற்றாண்டுச் சீடர்கள்.

முன்னேற்றம்
காலத்தால் அளவிடப்படுவதில்லை.

சிந்துவெளியின்
நகர நாகரிகத்தை அழித்தனர்—
ஆரியக் காட்டுமிராண்டிகள்.
காலத்தால் பிந்தையதென்பதால்
ஆரியம் - முன்னேற்றமல்ல.

'பிறப்பொக்கும்
எல்லா உயிர்க்கும்' என்ற
குறளுக்குப் பிந்தையதுதான்
மனுநீதி.

பிரெஞ்சுப் புரட்சிக்குப்
பின்னர்தான்
லூயி போனபார்ட்.[3]



**தறியடிக்கும் ஏழை முதியவர்கள்**
**கணினியடிக்கும் பணக்காரச் சிறுவர்கள்**
**முன்னேற்றத்தின் அளவுகோல் எது?**

அக்டோபர் புரட்சிக்குப்
பிந்தையதுதான்
எல்சினின் ஆட்சிக் கவிழ்ப்பு.

முன்னேற்றம்
ஆண்டுகளால் அளவிடப்படுவதில்லை.
காலம்தான்
முன்னேற்றத்தால் அடையாளம்
இடப்படுகிறது.

இயற்கையுடன்
மனிதன் கொண்ட உறவினால்
காலத்தை அடையாளமிடுவதாயின்
அன்று கற்காலம்
இன்று கணினிக் காலம்.

மனிதனுடன்
மனிதன் கொண்ட உறவினால்
அடையாளமிடுவதாயின்
இது முதலாளித்துவத்தின் காலம்
ஏகபோக மூலதனத்தின் காலம்.

**இயற்கையுடன்**
**மனிதன் கொண்ட உறவினால்**
**காலத்தை**
**அடையாளமிடுவதாயின்**
**அன்று கற்காலம்**
**இன்று கணினிக் காலம்.**

**மனிதனுடன்**
**மனிதன் கொண்ட உறவினால்**
**அடையாளமிடுவதாயின்**
**இது முதலாளித்துவத்தின் காலம்**
**ஏகபோக மூலதனத்தின் காலம்.**



இருபதாம் நூற்றாண்டிலுமா இப்படி
என்று கேள்விக்குறியிடுவோர்
முதலாளித்துவ சமூகத்திலுமா இப்படி
என்று சொல்லிப் பாருங்கள் -
கேள்வியின் முரண்
கேட்பவரின்
நாக்கையே அறுக்கும்.

அநீதியின் திரண்ட வடிவம்
மூலதனம்.
பாட்டாளி வர்க்கம்
உழைக்க உழைக்க,
பாற்கடலைக் கடையக் கடைய,
மூலதனம் எனும்
ஆலகால விடம் தான்
திரண்டு வருகிறது.

கடலின் அடியாழத்தில் கிடந்த
அனைத்துக் கசடுகளும்
புதிய வீரியத்துடன்
மிதந்து எழும்புகின்றன.

ஆப்பிரிக்கப் பழங்குடிகள்
இந்தியச் சாதிகள்
ஆப்கான் இனக்குழுக்கள்
எகிப்திய மம்மிகள்....
இறந்த காலத்தின்
ஆவிகளனைத்தும்
மூலதனத்தின் குரலில்
அலறுகின்றன.

செவ்வாய் நோக்கிப் பாய்கிறது
விஞ்ஞானம்.
தத்துவ ஞானமோ
நீட்சேயின் மீமனிதன்
கான்ட்டின் அறியொணாவாதம்
சங்கரனின் மாயாவாதம் - என
கி.மு - வை நோக்கித்
திரும்புகிறது.

[4] டோலியைப் படைக்கிறது
விஞ்ஞானம்.



படிப்பகம்

www.padippakam.com





**நுகர்பொருளின் அணிவகுப்பு!**
**அருகில் அடிமைச் சந்தைக்கு**
**விற்கப்பட்ட சூடான் நாட்டு சிறுவன்**

மேய்ப்பனை நாடுகிறது
மெய்ஞ்ஞானம்.
எல்லா உற்பத்தி சக்திகளும்
முன் நோக்கிப் பாய்கின்றன.
உற்பத்தி சக்திகளில் தலையாய
மனிதன்
பின்னுக்கிழுக்கப் படுகிறான்.

2000 ஆண்டுகளுக்கு முன்
கிறித்து பிறந்தார்.
25 லட்சம் ஆண்டுகளுக்கு முன்
மனிதன் அவதரித்தான்—
குரங்கிலிருந்து.

கற்காலத்தின்
முதல் கல்லை
மனிதன் தீட்டத் துவங்கியதோ
ஒரு லட்சம் ஆண்டுகள் முன்.

கல்லையும் மரத்தையும்
செதுக்கிய போதெல்லாம்
தானும் செதுக்கப்பட்டதை
அறியாமல்,

மண்ணை உழுதபோதெல்லாம்
தானும்
பண்படுத்தப்பட்டதை உணராமல்,
நூற்றாண்டுகள் பல போயின.

மார்க்ஸ் வந்தார்:

"இயற்கையை மாற்றியமைத்த போதே
நீயும் மாற்றியமைக்கப்பட்டாய்.
இயற்கையுடனான
உனது உறவு மாறியபோது
சக மனிதனுடனான
உனது உறவும் மாறியதே.

உன் உடலின்மீதே உரிமையின்றி
அந்நியப்படுத்தப்பட்ட போது
நீ அடிமை.
நிலத்திலிருந்து அந்நியப்பட்ட போது
பண்ணையடிமை.

இப்போது
உன் உழைப்பிலிருந்தே
அந்நியப்படுத்தப் பட்டிருக்கிறாய்—
நீ பாட்டாளி.

'உழைப்பு -
இயற்கையினால் சுமத்தப்பட்ட
அவசியம்.'

உழைப்பைச் சாபக்கேடாகவும்
ஓய்வைச் சுதந்திரமாகவும்
உணர்தல் மனிதத் தன்மையல்ல.

'எது மிருகத் தன்மையோ
அது
மனிதனுக்குரியதாகியிருக்கிறது.'

பாட்டாளி வர்க்கமே
நீதான்
இம் மனிதகுலத்தின் மீட்பன்

உன் பணி
உலகை வியாக்கியானம்
செய்வதன்று -
அதனை மாற்றியமைப்பது"

என்று
தத்துவ ஞானத்தைத்
தரையிறக்கினார் மார்க்ஸ்.

சொல்லுங்கள்!

மனித குலத்தின் வரலாற்றை
யாருக்குப்பின் - என்று
கணக்கிடுவது பொருத்தம்?

மார்க்சுக்குப் பின்
என்று கணக்கிட்டவர்கள்
சோசலிசம் படைத்தார்கள்.

கிறிஸ்துவுக்கு மறுவருகையில்லை.
கிருதயுகம் எழுவதுமில்லை.

விலங்குத் தன்மையை
இழந்தவன் மனிதன் - எனக்
குறிக்க வேண்டுமானால்
குரங்குக்குப் பின்
என்று கணக்கிடலாம்.

மனிதத் தன்மையை
உணர்ந்தவன் மனிதன் - எனக்
குறிக்க வேண்டுமானால்
மார்க்சுக்குப் பின்
என்று கணக்கிடலாம்.

'21-ஆம் நூற்றாண்டிலா!'
என்ற வியப்புக்குறியைக்
கேள்விக் குறியாக்குங்கள்.

நாகரீகத்திற்குப் பின்
அநாகரிகமா?
குறளுக்குப் பின்
மனுநீதியா?
சோசலிசத்திற்குப் பின்
முதலாளித்துவமா?
என்று கேட்டுப் பழகுங்கள்.

மனிதர்களின் வரலாற்றை
மார்க்சுக்கு முன்
மார்க்சுக்குப் பின் - என்று
திருத்தி எழுதுவோம்.
தேவனின் வரலாற்றையும்தான்.

— மருதையன்

1. சயர் (Zaire): மத்திய ஆப்பிரிக்காவின் மிகவும் பின்தங்கிய ஏழை நாடு.

2. கிரேக்க அறிஞர். மருத்துவ உலகின் தந்தையெனக் கருதப்படுபவர்.

3. மன்னராட்சியை ஒழித்த பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தன்னையே மன்னனாக முடிசூட்டிக் கொண்ட கழிசடைப் பேர்வழி.

4. பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் குளோனிங் முறையில் உருவாக்கிய ஆடு.



படிப்பகம்

www.padippakam.com




## ● வாசகர் கடிதம் ●

★ ம.க.இ.க. மாத இதழான புதிய கலாச்சாரம் கண்டேன். தஞ்சாவூர் புதிய பஸ்ஸ்டாண்டில் ஒரு பேருந்துக்குள் ஏறி ஒருவர் இதன் பெருமைகளை கூறி கூவி விற்றுக் கொண்டிருந்தார். நானும் ஒரு ஐந்து ரூபாயை நீட்டி வாங்கினேன். நான் இதழைப் பார்த்து வாங்கவில்லை, அந்த ஆளின் உழைப்பைப் பார்த்து வாங்கினேன். அதைப் படிக்க ஆரம்பித்தவுடன் அதன் செய்தியின் சாரங்களுக்குள் மூழ்கிப் போனேன். இந்த இதழைப் பற்றி அந்த ஆள் கூறியதெல்லாம் நூற்றுக்கு நூறு உண்மையென உணர்ந்தேன்.

— அதிரை இளையசாகுல்,
அதிராம்பட்டினம்.

★ மரண தண்டனை பற்றிய புதிய கலாச்சாரத்தின் தலையங்கம் வெளியிட்டுள்ள கருத்துக்கள் எங்களுக்கும் உடன்பாடானதே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மருத்துவர் சிவசுப்ரமணிய ஜெயசேகர் எழுதிய 'அபின்' சிறுகதை படித்தேன். பொதுவாக சிறுகதை படிக்காத நான் இந்தக் கதையைப் படிக்கக் காரணம், இவர் மருத்துவக் கல்வியை தமிழில் படித்து எழுதியதால் தமிழக அரசால் பழிவாங்கப்பட்டவர் என்பதைக் கேள்விப்பட்டதால்தான். காரல் மார்க்சின் 'மதம் மக்களுக்கு அபின்' என்ற ஒருவரிக் கவிதையினை இக்கதை மூலம் நிறுவியிருக்கிறார்.

— பொன். சீனிவாசன்,
வெண்ணந்தூர்.

★ நீங்கள் வெளியிடும் தொடர் கட்டுரை, ஆர்.எஸ்.எஸ்.-இல் இல்லாத மூடப்பழக்க வழக்கம் பண்பாட்டில் ஊறிப்போன முதியவர்கள், நடுத்தர வர்க்கம் போன்றவர்களின் கண்களைத் திறக்க பயனுள்ள, பாதுகாக்க வேண்டிய கட்டுரை. மாற்றுக் கருத்துக்காரர்களின் சின்டைப் பிடிக்க வாள் கிடைத்துவிட்டது.

— கணபதி, மதுரை.

★ தங்கள் அமைப்பு வெளியிடும் புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் மாத இதழ்கள் சமுதாய, அரசியல் அவலங்களை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டி வருகின்றன என்றால் அது மிகையாகாது. ஆயினும் ஒரு சிலரை அதில் தேவையில்லாமல் மிகக் காட்டமாக எழுதுவது சரியல்லை எனக் கருதுகிறேன். டிசம்பர் பு.க. இதழில் துணை நடிகை பாதிக்கப்பட்ட சம்பவத்தைச் சாடியுள்ள சரியான கருத்தில் - சூப்பர் ஸ்டார் குரைத்தார் - என எழுதியிருப்பது இதழின் மதிப்பைக் குறைக்கிறது. எனவே இதுபோன்ற வசைவரிகளை இனி நீக்கு வீர்கள் என்ற நம்பிக்கையுடன் எழுதுகிறேன்.

— இரா. ஆகாஷ்குமார்,
செவ்வாய்ப்பேட்டை,
(ரஜினி ரசிகனல்ல-பு.ஜ., பு.க. வாசகன்)

★ டிசம்பர் இதழில் சிறுகதை என்ற தலைப்பில் 'தோல் செருப்பு', 'அபின்' என்ற உண்மைச் செய்திகள் வெளிவந்துள்ளன. அதற்கு ஏன் சிறுகதை எனத் தலைப்பு? உண்மை சம்பவம் என்று தெரிவிக்கவும். இதுபோன்ற நிகழ்ச்சிகளை வெளியிடுவதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

— ஷாஜகான், தேனி.

★ அரசியல் நியாயத்தைத் தூக்கிலிடும் தமிழினப் பிழைப்புவாதிகளை தலையங்கம் எடுப்பாகக் காட்டியது.

தன்னுடைய செருப்பு ஆசை பூர்த்தியடையாத நிலையில் தற்காலிகமான வெறுப்புணர்ச்சியும், செருப்பு கிடைக்கும் தருணத்தில் வாழ்நிலையின் பாதிப்பில் ஒரு முழுமையான பொறுப்புணர்ச்சியும், உழைக்கும் மக்களிடம்தான் வெளிப்படும் என்பதை 'தோல் செருப்பு' உணர வைத்தது.

ஆர்.எஸ்.எஸ். புரட்டல்களைப் படித்த ஒரு சிலர், இந்துக்களைக் குறை சொல்வதே உங்கள் வேலை என்றும், முஸ்லீம்களின் தவறுகளைச் சுட்டுவதில்லை என்றும் கூறினர்.

— தொழிலாளர் பிரச்சாரக் குழு,
நெய்வேலி

★ சிவசுப்பிரமணிய ஜெயசேகர் தனது படைப்பில் கூறுகையில், ''சமூகத்தின் அவலம் ஒரு சிலருக்கு வெறும் செய்தியாகவே உள்ளது. இந்தச் சமூகத்தின் மீது மக்களைக் கோவம் கொள்ளாமல் இருக்கச் செய்வது எது என யோசிக்கச் சொன்னது'' என்கிறார்.

அவரது படைப்பு ஒவ்வொரு இதழிலும் தொடர வாழ்த்துக்கள்!

— நசீம் இக்மத், கோயம்புத்தூர்.

★ நான், புதிய கலாச்சாரத்தை 1998 முதல் படிப்பதை நிறுத்தியவன். இந்நிலையில் டிசம்பர் '99 இதழை எனது நண்பர் மூலம் கிடைக்கப் பெற்றேன். அதில் சிவசுப்பிரமணிய ஜெயசேகரின் - 'அபின்' என்ற சிறுகதையை எழுதி அதில் - அப்பாஸ் என்ற கேரக்டர் கொடுத்து, கடைசியில் 'மழையின் இரைச்சல் கூடியது - பாங்கோசை அதில் நனைந்து அடங்கியது என்று - தேவையே இல்லாத ஒரு கதை எழுதி - அதில் இஸ்லாத்தைக் கொச்சைப் படுத்துவதாய் நினைத்து, தனது பெயருக்கேற்றவாறு அரிப்பைத் தீர்த்திருக்கிறார்.

கம்யூனிசம் அஸ்தமிப்பதே தற்போதைய வரலாறு. இனியும் அதுவரும் என்று நீங்கள் வாய்கிழிய கத்தினாலும் வெற்றி உங்களுக்குக் கிட்டாது என்பதே சத்தியம்.

ஆகவே! அன்புச் சகோதரரே இம்மடலைப் பார்த்த பின்பும், இயலாதவர்களால் மூளைச்சலவை செய்யப்பட்ட உங்கள் சித்தாந்தத்தின் அடிப்படையிலிருந்து எழுத முனையாதீர்கள்.

இன்ஷா அல்லாஹ்

பின் குறிப்பு:

கடந்த இதழில் 'கற்பு' இழந்த பெண்ணுக்கு மானம் உண்டா?, மற்றும் - 'ஆர்.எஸ்.எஸ். முகாமும் ஈரோட்டுப் பாசறையும்'' சிந்தனைத்தனமாக இருந்தது. வாழ்த்துக்கள்.

— அபு ஆயிஷா, சென்னை-2.

★ இம்முறை வந்த பு.க.வின் ஆசிரியர் தலையங்கம் புலம் பெயர்ந்த தமிழர்களிடம் வரவேற்புப் பெறும். ''இராஜீவ் கொல்லப்பட வேண்டியவரா?'' என்ற கேள்வியை ஒவ்வொரு ஈழத்தமிழனிடமும் கேட்கப்பட்டால், ஆம் என்றே வரும். உயிருடன் அப்பாவி மக்களை ''செயின் புளக்''கால் நசித்து கொன்றது இந்திய இராணுவம். அப்பாவிப் பெண்களை பாலியல் வல்லுறவு செய்து கொன்றது. இதற்கும் மேலாய் ''தமிழ் தேசிய சுயநிர்ணய உரிமையை'' இடையில் புகுந்து வேரோடு வெட்டிச் சாய்த்தது. இப்போது நடைபெறுவது 'தேசிய விடுதலை' என்ற போர்வையில் 'இயக்க இருப்புக்கான' போர் என்றே இதன் செல்நெறியை வைத்துப் பொருத்திப் பார்க்கிறேன். எனினும் புலிகளின் மரபுவழிப் போரின் பெருவெற்றி பலரை மயங்க வைத்துள்ளது. இதற்கு விடை 'ஜெனரல் கியாப்' எழுதிய வியட்நாம் நூலைப் படித்தால் புரியும்.

— ஜெர்மனியிலிருந்து ஒரு வாசகர்.



படிப்பகம்

www.padippakam.com

**நூல் அறிமுகம்: 'கலைவாணர் கண்ட ரஷ்யா'**

# 'அங்க இரும்புதான் இருக்கு திரையைக் காணோம்!'

ஏடறிந்த வரலாறு நெடுகத் தேடினாலும் கம்யூனிச - சோசலிச அரசியல், சித்தாந்தத்தைப் போல அவதூறுக்கு இலக்கான வேறெதையும் காண முடியாது. அதைப் போலவே தோழர் ஸ்டாலினைப் போல அவதூறுகளுக்கு இலக்கான வேறெந்த தனிநபரையும் தலைவரையும் காண முடியாது.

1990-களின் ஆரம்பத்தில் சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடந்த அதிரடி ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு அமெரிக்க அரசியல் சமூகவியலாளர் ஃபிரான்சிஸ் ஃபுக்குயுமா, "வரலாற்றின் முடிவைப்" பிரகடனப்படுத்தினான். பின்நவீனத்துவ ஞானோதயம் பெற்றவர்கள், தாம் முன்னறிவித்த தத்துவத்தின் முடிவும், புதிய சகாப்தத்தின் பிறப்பும் உறுதியாகி விட்டதாக குதூகலித்தனர். ஆனால் பத்தாண்டுகளுக்குள்ளாகவே, ஃபிரான்சிஸ் ஃபுக்குயுமா தனது முடிவு பொய்த்துப் போய்விட்டதாக அறிவித்துவிட்டான்.

எரிந்து சாம்பலாகிப் போய்விட்டதாக எதிரிகளால் பிரச்சாரம் செய்யப்பட்டதற்கு மாறாக "ஃபீனிக்ஸ் பறவை"யைப் போல கம்யூனிச - சோசலிசமும், ஸ்டாலினும் உயிர்த்தெழுந்து விட்டார்கள்.

"புரட்சிக்குப் பிந்திய சமுதாய ஆய்வு" என்கிற பெயரில் கம்யூனிச - சோசலிச சமுதாயங்களின் தோல்வியில் இருந்த படிப்பினைகளைத் தொகுப்பதாக புறப்பட்ட முன்னாள் மார்க்சியர்கள் அனைவரும் ஃபிரான்சிஸ் ஃபுக்குயுமாவின் சகபாடிகளுடைய அவதூறுகளை விழுங்கி வாந்தியெடுத்தார்கள். இவர்களால் கற்பிக்கப்பட்ட ஆய்வு முடிவுகளை முறியடிக்கும் அனுபவ உண்மைகளோ ஏராளமாக உள்ளன.

அவற்றில் ஒன்றாக, ஸ்டாலின் தலைமையிலான சோவியத் சோசலிச சமுதாயத்தை நேரில் கண்டுவந்த கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், 1951-ஆம் ஆண்டு சென்னை கடற்கரைப் பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரை இப்போது மீண்டும் மறுபதிப்பாகி வெளிவந்துள்ளது. சோவியத் சோசலிச சமுதாயம், கட்சி மற்றும் தோழர் ஸ்டாலினுக்கு எதிராகப் பரப்பப்பட்டு வரும் அவதூறுகள் பலவற்றுக்கு நேரடியான மறுப்பாகவே கலைவாணரது உரை அமைந்துள்ளது.

புரட்சிக்குப் பிந்திய சமுதாயம் பற்றி ஆய்வு செய்த "அறிஞர்கள்" எல்லாம், சோவியத் சோசலிசத்தில் பெரியார், கலைவாணர் போன்றவர்கள் கண்டு சொன்ன அனுபவ உண்மைகளை அடியோடு நிராகரித்து விட்டார்கள். இந்த வகையில் இந்த "அறிஞர்கள்" அன்றைய காங்கிரசுக்காரர்களின் வழிகாட்டுதலையே பின்பற்றுகிறார்கள் என்பதைக் கலைவாணரது உரையிலிருந்தே காண முடிகிறது.

*"சமீபத்திலே நான் ரஷ்யா சென்றிருந்தபோது திருச்சியிலே ஒரு மாபெரும் கூட்டத்திலே காங்கிரஸ் தலைவர்கள் ரஷ்யாவைப் பற்றி அவதூறாகப் பேசியிருக்கிறார்கள். ரஷ்யாவிலே ஒன்றும் கிடையாது. மக்கள் எல்லாம் கஷ்டப்படுவதுதான் வழக்கம். ஆனால் அங்கிருந்து வருபவர்கள் எல்லாம் அதைப் பற்றி புகழ்ந்து புகழ்ந்து பேசுகிறார்கள். இப்பொழுது இங்கிருந்து ஒரு கோமாளி போயிருக்கிறான். அவன் வந்து என்னென்னவோ உளறப் போகிறான். அதை நீங்கள் எல்லாம் நம்ப வேண்டாம் என்று எச்சரித்திருக்கிறார்கள்."*

சோவியத் சோசலிச சமுதாயத்தைப் பற்றிய அணுகுமுறையிலேயே வர்க்கப் பார்வை இருப்பதை முதலில் கலைவாணர் விளக்குகிறார்.

*"ரஷ்யா பற்றி எல்லா நாடுகளிலுமே அதிலும் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளிலே ரஷ்யா என்றால் ஒரு பூதம் என்று நினைக்கிறார்கள். ஏனென்றால் அமெரிக்காவிலே பெரிய பெரிய பணக்காரர்களும் பிச்சைக்காரர்களும் வாழுகின்றனர். அங்கே ரஷ்யா என்று சொன்னவுடனேயே அப்படிப் பயம் ஏற்படுவது இயற்கை.*




*"இந்தியாவிலோ ரஷ்யாவை அவ்வளவு சாண்டாளர்களாக எண்ணுவதில்லை. பணக்காரர்களுக்கு அவர்களைப் பற்றிப் பயம். ஆனால் ஏழை மக்களுக்கு ஒரு நண்பன் ரஷ்யா நாடு. ஆகையினாலே பாதிப்பேர் ரஷ்யாவை விரும்புவதும், பாதிப்பேர் அந்த நாட்டில் ஒன்றுமே கிடையாது, வெறும் கட்டுப்பாடு, கலையை அனுபவிக்கத் தெரியாதவர்கள் உள்ள நாடு என்று நினைக்கிறார்கள்."*

*"நான்கூட இதைப்பற்றி தெரிவதற்கு முன்னால் இப்படித்தான் எண்ணியிருந்தேன். எல்லோருக்கும் ஒரே உடை, எல்லோருக்கும் ஒரேவித சாப்பாடு, எல்லோருக்கும் ஒரேவித வீடு. அந்த நாடு எப்படித் தானிருக்கும்? அது கட்டுப்பாடுகள் நிறைந்த நாடாகத்தானிருக்குமென்று எல்லோரும் பயந்துதான் இருப்பார்கள். ரஷ்யாவைப் பற்றி பத்திரிகைகளும், பணக்காரர்களும் பலவிதமாகக் கூறி வந்தனர். ஆனால் அங்குச் சென்று பார்த்து வந்ததும் இந்த நிலை அடியோடு மாறிவிட்டது."*

சோவியத் ஒன்றியம் ஒரு இரும்புத் திரை நாடாக இருந்தது என்றும், வெளி உலகு பற்றிச் சோவியத் மக்களுக்கு எதுவும் தெரியாதவாறும், அங்கே என்ன நடக்கிறதென்று வெளியுலக மக்கள் அறியமுடியாதவாறும் தடுக்கப்பட்டிருக்கிறது என்றும், சோசலிசத்தின் எதிரிகள் பிரச்சாரம் செய்வதுண்டு. இவற்றுக்கெல்லாம் மறுப்புரைக்கிறார், கலைவாணர்.

*"இங்கே இதைச் சொல்வது ஏனென்றால், ரஷ்யாவில் சில க்ஷேமமான இடம் இருக்கும்; காரிலே ஏற்றி வைத்து, மூடிவைத்து அந்த சுபிக்ஷமான இடத்திற்குக் கொண்டுபோய் கதவைத் திறந்து காட்டிவிட்டு, பிற இடங்களும் இம்மாதிரியே இருக்குமென்று கூறி பழையபடி கொண்டு வந்து விடுவார்கள் என்று நினைத்தோம். இதுபோன்ற கட்டுப்பாடுகள் இல்லை. அப்படிக் கட்டுப்பாடு அங்கே கிடையவே கிடையாது.*

*"எங்கு போய் பார்க்க வேண்டுமென்றாலும் போய்ப் பாக்கலாமென்று சொன்னார்கள். முதலிலே கொஞ்ச தூரமுள்ள இடங்களுக்குக் காரிலே சென்றோம். அப்புறம் பக்கத்திலே போக வேண்டிய இடங்களுக்கு நடந்து போனோம். தெருக்கள் வழியா*



படிப்பகம்

www.padippakam.com

கவும், கடைகள் வழியாகவும் நடந்து நடந்து ஒவ்வொரு இடத்திற்கும் போய்ப் பார்த்தோம். இரும்புத்திரை போட்டிருக்கிறார்கள் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். இரும்புத் திரை இருக்கிறது என்று சொன்னார்கள். அங்கு இரும்பு இருக்கிறது. திரையைக் காணோம்.''

சோசலிசக் கட்டுமானத்தில் மக்கள் பங்களிப்பும் உணர்வும் எவ்வளவு சிறப்பாக இருந்தது, சமுதாயம் எவ்வாறு இயங்கியது என்பதைக் கலைவாணர் வியந்து போய்ச் சொல்லுகிறார்.

''எல்லோரும் ரயிலிலே வந்து பின்பு பேசாமல் இறங்கிப் போய்விடுகிறார்கள். டிக்கட் கேட்பதில்லை; செக்கிங் கிடையாது. நாங்கள் வந்த ஏழாவது ஸ்டேஷனிலே இதைக் கண்டோம். அங்கு எங்களோடு ஒரு சினிமா டைரக்டர் வந்தார். என்ன இது, ஒருவரும் டிக்கட் கேட்கவில்லையே என்று கேட்டேன். நீங்கள் என்ன எங்கள் தேசத்தை ஏமாற்றுவோம் என்றா நினைக்கிறீர்கள்? கொஞ்சம் கூட நினைக்க வேண்டாம். இது எங்கள் அரசாங்கம். எங்கள் அரசாங்கத்தால் போடப்பட்ட ரயில்வே. அவர்கள் கொடுக்கும் சம்பளம். இதை வைத்துக் கொண்டு அவர்களை ஏமாற்றுவோமோ? அப்படியானால் உங்கள் ஊரிலே அவ்வாறு நடக்குமா (கை தட்டல்) என்று கேட்டார். நடக்குமா எனக் கேட்டால் நான் என்ன சொல்ல? முகத்தைத் திருப்பி வைத்துக் கொண்டேன். (கை தட்டல்) வேறு வழியில்லை.''

தோழர் ஸ்டாலினை பாசிச சர்வாதிகாரி இட்லருக்கு இணைவைத்து சோசலிசத்தின் எதிரிகள் பிரச்சாரம் செய்கிறார்கள். அன்றைய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே சோசலிசத்தின் பிந்தைய தோல்விக்குக் காரணம் என்று அவதூறு செய்கிறார்கள். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது கட்சி சர்வாதிகாரமாகவும், கட்சி சர்வாதிகாரம் மத்தியக் குழு சர்வாதிகாரமாகவும், இதுவே தனிநபர் தலைமையின் சர்வாதிகாரமாகவும் குறுக்கப்பட்டதாக சி.பி.ஐ., சி.பி.எம்., மணியரசன் குழு உட்பட பலரும் புளுகுகின்றனர். ஆனால் தோழர் ஸ்டாலினின் கீழிருந்து தெரிவு செய்யப்பட்ட அரசியல் அமைப்பில் அனைவருக்கும் ஆயுதமேந்தும் உரிமை உட்பட எப்படிப்பட்ட ஜனநாயகம் நிலவியது என்று கலைவாணர் விளக்குகிறார்.

''எல்லா நாடுகளிலும் பட்டாளத்திற்கு ஆள் சேர்த்துத்தான் ஆக வேண்டும். ஆனால் அங்கே பட்டாளத்திற்கு ஆட்கள் சேர்க்க வேண்டியதில்லை. பொது மக்கள் என்றாலும் பட்டாளம் என்றாலும் ஒன்றேதான். ஓட்டலிலே வேலை செய்து கொண்டிருப்பவன் சண்டை என்று கேட்டவுடனே அந்தப் பாத்திரங்களைக் கீழே போட்டு, துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு செல்வான். குப்பை பெருக்குபவன் தன் கையிலுள்ளதைக் கீழே போட்டுவிட்டு துப்பாக்கியை ஏந்திச் செல்வான். தேசமே பட்டாளம்; எல்லோரும் வீரர்கள். ஒரு படைகூட அங்கில்லை.

பல பெரிய மியூஸியங்கள் போன்ற இடத்தைக் காப்பதற்கு மட்டும் அங்கு சில வீரர்கள் இருக்கிறார்கள். மற்ற ஆட்கள் எல்லோரும் வேலை செய்தாக வேண்டும். அந்த நாடு சுபிட்சமாக இருக்கிறது. எல்லாவற்றையும் விடப் பெண்கள்தான் எல்லா இடங்களிலும் வேலை செய்கிறார்கள். எந்தத் தொழிற்சாலையைப் போய்ப் பார்த்தாலும் அவர்கள் நூற்றுக்கு எழுபது பேர்களாக வேலை செய்கிறார்கள். அந்த அரசியல் அமைப்பைப் பற்றி நினைக்க ஆச்சரியமாகவே இருக்கும்.''

சோவியத் ஒன்றியத்தில் பலகட்சி ஜனநாயகம் இருக்கவில்லை. பலகட்சி ஜனநாயகத்தைப் புரட்சியின் மூலம் ஒழித்துக் கட்டிவிட்டுத்தான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்டிருந்தது. கம்யூனிச இலட்சியத்தை அடையும் பாதையில் இது ஒரு இடைக்கட்டம் தான். எதிர்க் கட்சியோ, பல கட்சியோ இல்லாததை இயல்பாக எடுத்துக் கொள்ளும் கலைவாணர் கம்யூனிசத்தை நோக்கிச் செல்லும் இலக்குபற்றி சோவியத் மக்கள் அறிந்திருப்பதாகச் சொல்லுகிறார்.

குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பல் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் அதிகாரவர்க்க முதலாளித்துவ ஆட்சியை நிறுவுவதற்கு முன்பு வரை, சோவியத் ஒன்றியத்தில் நிலவி வந்த சோசலிச சமுதாயம் எத்தகைய உன்னத அமைப்பாக இருந்தது. இதைக் கலைவாணரின் எளிமையான, சுவையான உரை மூலம் நமது மக்கள் அறிந்திட இன்னொரு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

● சாத்தன்

| | |
|---|---|
| நூல் | : கலைவாணர் கண்ட ரஷ்யா |
| தொகுத்தோர் | : பெ.க. சாமிநாதன், க. பரமசிவன் |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் |
| விலை | : ரூ. 10.00 |
| கிடைக்குமிடம் | : கீழைக்காற்று, 10, ஔலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 2. |

## ஜெயமோகனுக்குத் தமிழ் மீசை முளைத்தால்...

சங்கராச்சாரி, அசோக் சிங்கால் போன்றோரெல்லாம் இந்துத்துவத்தின் பழமைவாத முகங்கள், இவற்றை வைத்துக் கொண்டு கம்யூனிசத்தை எதிர்ப்பது கடினமென்பதால் காலத்திற்கேற்ப தர்மத்தை நிலைநாட்ட இலக்கிய இந்து முன்னணியின் கொ.ப.செ.-வாக அவதாரமெடுத்திருப்பவர் ஜெயமோகன். ''பின் தொடரும் நிழலின் குரல்'' என்பது அவரது சமீபத்திய கம்யூனிச எதிர்ப்பு நாவல்.

அந்நூல் வெளியீட்டு விழாவில் த.தே.பொ.க.-வின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் திருவாளர். இராசேந்திர சோழன் கீழ்க்கண்டவாறு திருவாய் மலர்ந்தருளினார்:

''ஜெயமோகனுடைய தத்துவத்தில் மாறுபட்ட கருத்துண்டு. அதேசமயம் இலக்கியம் என்ற வகையில் அவரின் புதிய உத்திகள், நாவலின் சில இடங்கள் வாசகன் என்ற வகையில் என்னைக் கவர்கின்றன. ரஷ்யாவைப் பற்றியும் சோசலிசத்தின் தோல்வியைப் பற்றியும் ஜெயமோகன் விமர்சித்திருக்கிறார்.''

''ஆனால் நாங்கள் அந்த வகையான ஆச்சார கம்யூனிஸ்டுகள் அல்ல. அதனால் தான் எங்கள் அமைப்பில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே கூடாது என்று முடிவெடுத்திருக்கிறோம். ஏற்கனவே இருக்கின்ற ஜனநாயகத்தை விட ஒரு பரந்த ஜனநாயகமே நமக்கு தேவை.''

''ஏதோ இந்த முதலாளித்துவ ஜனநாயகத்திலாவது ராஜீவ் கொலை வழக்கில் கைதானவர்களுக்காக நாம் கருணை மனுப் போடவும், வழக்காடவும் முடிகிறது. இதுவே ஒரு புரட்சி நடந்த நாடாயிருந்தால் அடுத்த நிமிடமே 4 பேருக்கும் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கும்.''

பிரபாகரனின் சர்வாதிகாரத்தைப் பற்றி யார் விமர்சித்தாலும் ''அபச்சாரம்... அபச்சாரம்'' என்று மேல்வாயிலும் கீழ்வாயிலும் போட்டுக் கொள்ளும் இந்தத் தம்பிரான்கள் ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' என்று சொன்னாலே புட்டத்தில் குண்டூசி வைத்தது போலத் துள்ளுகிறார்களே ஏன்?

இந்து தேசியத்தைத் 'தீவிரமாக' எதிர்க்கும் இந்தத் தமிழ்த் தேசியத் தம்பிரான்கள், பிரம்மரிஷிப் பட்டம் வாங்க இலக்கிய வசிட்டனிடம் இளிப்பது ஏன்?

அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா. ஜெயமோகனுக்குத் தமிழ் மீசை முளைத்தால் இராசேந்திர சோழன்!

— சித்தன்



படிப்பகம்

www.padippakam.com

தொடர்கட்டுரை - 3

சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.-இன் பொய்யும் புரட்டும்

# மாட்டுக்கறியும், சிறுபான்மையினர் கல்வி உரிமையும்

**"இந்த மண்ணின் மைந்தர்களான இந்துக்களுக்குக் கூட கொடுக்கப்படாத சலுகைகள் மதம்மாறிப்போனவர்களுக்கு அளிக்கப்படுவது மிகப் பெரிய கொடுமையாகும். பள்ளிக் கூடம் தொடங்குவது நடத்துவது போன்ற விசயங்களில்கூட முஸ்லீம், கிறிஸ்தவர்களுக்கு உள்ள சலுகைகளையாவது தாருங்கள் என்று கேட்கின்ற நிலையில் இந்துக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்."**

— **"இந்துக்களுக்கு உரிமையே கிடையாதா," இந்து முன்னணி வெளியீடு, பக்: 19**

இயற்கையையும், சமூகத்தையும் அறிவியல் நோக்கிலிருந்து புரிந்து கொள்வதே கல்வி. முட்டாள் தனங்களையும், மூட நம்பிக்கைகளையும் உயிராகக் கொண்டுள்ள மதங்கள் கல்வியுடன் உறவு கொள்ள எவ்வித அடிப்படையும் இல்லை. இந்தியாவில் பல நூறு ஆண்டுகளாக மதத்தின் பிடியில் சிக்கியிருக்கும் கல்வியை விடுவிக்க வேண்டும் என்பதுதான் மதச்சார்பின்மையின் முக்கியக் கோரிக்கை. இந்தியாவில் மதத்தோடு கல்வி கொண்டுள்ள உறவின் வரலாறு என்ன?

பெரும்பான்மை உழைக்கும் மக்களுக்கு கல்வி கிடையாது என்பதைத் தான் பார்ப்பனியம் ஈராயிரம் ஆண்டுகளாகப் பின்பற்றி வருகிறது. ஷாகாவில் ஸ்வயம் சேவகர்கள் ஆராதனை செய்யும் 'மனு' தனது தர்மத்தில் வேதம் கேட்ட காதில் ஈயத்தை ஊற்றுவது, உச்சரித்த நாக்கை வெட்டுவது உட்பட கல்வி மறுப்பிற்காக பெரும் தண்டனைப் பட்டியலையே பொறித்திருந்தான். நடைமுறையிலும் கட்டை விரல் வெட்டப்பட்ட ஏகலைவனிலிருந்து, கண்பறிக்கப்பட்ட சேலம் கட்டிநாயக்கன்பட்டி தனம் வரை அதே 'தர்மம்' தான் நிலவுகிறது.

'பிராமணர் - சத்திரியர்' போன்ற ஆளும்வர்க்கப் பிரிவினருக்காக நடத்தப்பட்ட குருகுலங்களிலும் வருணாசிரம தர்மத்தின் பாடத்திட்டம்தான் கல்வியாகக் கற்றுத்தரப்பட்டது. மத்திய காலத்தில் முகலாய மன்னர்கள் அறிமுகப்படுத்திய மதரஸா கல்வியில் இருந்த மதசார்பின்மை அம்சங்கள் படிப்படியாக ஒழிக்கப்பட்டு இறுதியில் மதக்கல்வியே மேலோங்கியது. ஆங்கிலேயர் காலத்தில்தான் கிறித்துவ மிஷனரிகள் மூலம் நவீன கல்வி அறிமுகமாகியது. அதுவும் காலனியாதிக்கத்திற்கு உதவும் வகையிலேயே உருவாக்கப்பட்டது.

இந்த கிறித்துவ நிறுவனங்களில் அன்றும் இன்றும் படித்துப் பயனடைபவர்களில் ஆகப்பெரும்பான்மையினர் பார்ப்பன - மேல் சாதியினர்தான். வெள்ளையர் காலத்து ஐ.சி.எஸ், தற்போதைய ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் கும்பல்களெல்லாம் கிறித்துவக் கல்லூரிகளில் படித்து வந்தவர்கள்தான். அத்வானி போன்ற பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ் தலைவர்களும் இங்கு படித்தவர்களே. அந்த வகையில் பார்த்தால் மிஷனரிகளின் சேவையில் முக்கிய பங்கை இவர்கள்தான் அனுபவித்திருக்கின்றனர்.

'இயேசு சங்கம்' நடத்தி வரும் சென்னை லயோலா கல்லூரி இந்தியாவின் சிறந்த கல்லூரிகளில் ஒன்று என்கிறார்கள். நடிகர்கள், பணக்காரர்கள், அதிகாரி - அரசியல்வாதிகள் போன்றவர்களின் வாரிசுகள் இங்குதான் படிக்கின்றனர். அவர்களில் பெரும்பான்மையினர் 'இந்துக்கள்' என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் கிறித்துவப் பள்ளியோ, அரசுப் பள்ளியோ அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறை அம்பேத்கார் முதல் குப்பன் சுப்பன் வரை மாறவில்லை. அவர்கள் படிக்கக் கூடாது என்ற மனுதர்மம் இன்னும் இறக்கவில்லை.

தற்சமயம் கல்வி நிறுவனங்கள் நடத்தும் சிறுபான்மைப் பிரிவினக்கு சட்டத்தில் சில சலுகைகள் உள்ளது உண்மை. ஆனால் இச்சலுகை மதச் சிறுபான்மையினருக்கு மட்டுமல்ல, மொழி, இனம் என்று பலருக்கும் தரப்படுகிறது.

அதை வைத்தே ராமகிருஷ்ணா மிஷன், சமஸ்கிருதக் கல்லூரிகள் போன்ற இந்துக்களும் சலுகைகளை அனுபவிக்கின்றனர். ராம கிருஷ்ணா மிஷன் கல்வி நிறுவனங்களில் உள்ள ஆசிரியர் நியமன முறைகேடுகளை தடுப்பதற்காக மேற்கு வங்க அரசு தலையிட்டது. இதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்காடிய மிஷன், 'நாங்கள் ராமகிருஷ்ண பரமஹம்சரை வழிபடும் சிறுபான்மையினர், இந்துக்களல்ல' என்று பகிரங்கமாக அறிவித்தது.

கல்விக் கொள்ளைக்கு மதத்தையே மாற்றுகிறார்களே என்ற எந்த இந்துபக்தரும் இதுவரை கேள்வி எழுப்பியதில்லை. இத்தகைய முறைகேடுகள் எல்லாத் தனியார் கல்வி நிறுவனங்களிலும் நடந்து வருகிறது. சிறுபான்மை கல்வி நிறுவனங்களும் விதிவிலக்கல்ல. கேரளத்தில் கிறித்துவ மிஷனரிகள், நாயர்கள் மற்றும் இசுலாமிய கல்வி நிறுவனங்களை நெறிப்படுத்த தலையிட்ட நம்பூதிபாடு அரசு அதற்காகவே கவிழ்க்கப்பட்டதும் ஒரு உதாரணம்.

சிறுபான்மையினருக்கான கல்விச் சலுகைகளால் இசுலாமிய மக்கள் அடைந்த பயன் என்ன? இந்துக்களை விடவும் கல்வி, வேலை வாய்ப்பில் அவர்கள் அதிகப் பயனடைந்திருக்கிறார்களா என்பதையும் நாம் பரிசீலிப்போம்.

தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு நிறுவனத்தின் ஆய்வுப்படி (1987-88) கிராமப்புற முஸ்லீம்களில் 58% பேர் கல்வியறிவற்றவர்கள் - இந்துக்களில் கல்வியறிவற்றோர் 51% பேர். நகர்ப்புறத்திலோ 42% முஸ்லீம்கள் கல்வியறிவற்றவர்கள்; இந்துக்களில் 25% பேர் கல்வியறிவற்றவர்கள், முஸ்லீம் பெண்களின் கல்வியறிவின்மை பற்றிச் சொல்லவே தேவையில்லை.

நகர்ப்புற இந்துக்களில் பட்டப்படிப்பு படித்தோர் 8% பேர்; முஸ்லீம்களில் 2.3% தான் பட்டதாரிகள். மேலும் முஸ்லீம் கல்வி நிறுவனங்களில் முஸ்லீம் அல்லாத மாணவர்களின் எண்ணிக்கைதான் ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது.

படிப்பதே வேலை வாய்ப்புக்காகத் தான் என்ற நிலைமையில், அரசு வேலை வாய்ப்புகளில் முஸ்லீம்கள் புறக்கணிக்கப்படுவதால், கல்வி கற்பதற்கான அவர்களது ஆர்வமும் இயல்பாகவே குறைந்து விடுகிறது. மேலும் ஏழ்மை காரணமாக பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்துவதென்பது இந்துக்களைவிடவும் முஸ்லீம் மாணவர்கள் மத்தியில் தான் அதிகமாக இருக்கிறது. உத்திரப் பிரதேசத்தில் மட்டும் 90% முஸ்லீம் மாணவர்கள் ஆரம்பப் பள்ளியையே தாண்டுவதில்லை என்கிறது கோபால் சிங் குழு (1983) அறிக்கை.

வட மாநிலங்களில் குறிப்பாக உ.பி.யில் முஸ்லீம் மக்களின் தாய்மொழியான உருது திட்டமிட்டே புறக்கணிக்



படிப்பகம்

www.padippakam.com

கப்படுவதும், பாட நூல்கள் உருது மொழியில் அச்சிடுவது வேண்டு மென்றே தவிர்க்கப்படுவதும், சமஸ்கிருத மயமான இந்தி திணிக்கப்படுவதும், பாடத்திட்டமே மறைமுக இந்துப் பிரச்சாரமாக இருப்பதும் இந்நிலைக்கு கூடுதல் காரணங்களாக அமைகின்றன.

ஆனால் கல்வி அமைச்சர்களின் மாநாட்டிலேயே சரசுவதி வந்தனம் பாடப்படும் சூழ்நிலையில், ஆர்.எஸ். எஸ்.இன் புரட்டல் வரலாறு கல்வித் திட்டத்தில் அமலாக்கப்படும் நிலையில், 47 கலவரத்தில் தன் கைத்துப்பாக்கியால் முசுலீம்பெண்ணைக் கொன்றதை சுயசரிதையில் எழுதிப் பெருமைப்படும் ராஷ்டோகி (ஓய்வு பெற்ற பேராசிரியர்) போன்ற இந்து வெறியரெல்லாம் - தேசிய கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தில் (NCERT) பொறுப்பெடுக்கும் காலத்தில், சிறுபான்மை மக்கள் சலுகை தந்து சீராட்டப்படுவதாகக் கூறுவது, அப்பட்டமான பித்தலாட்டமாகும். சிறுபான்மையோ, பெரும்பான்மையோ கல்வி என்பதைக் கடைச்சரக்காக்கி விற்றுவரும் சூழ்நிலையில் உழைக்கும் மக்களுக்கு எந்தச் சலுகையுமில்லை என்பதே நடைமுறை. ஒரு மதச்சார்பற்ற அரசில் மதத்தின் பிடியிலிருந்து கல்வியை விடுதலை செய்வது தான் இந்தப் பிரச்சினைக்குரிய ஒரே தீர்வு. அத்தகைய அரசில் சிறுபான்மையோரின் கல்விக்கும் உத்தரவாதமிருப்பதால் அவர்களுக்குச் சலுகை வேண்டும் என்ற கேள்வியே எழாது.

கிறித்துவ - இசுலாமிய கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களில் பெரும்பான்மையினர் 'இந்துக்கள்'தான் என்பதை ஏற்கனவே பார்த்தோம். ஆனால் 'இந்துக்களால்' நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் பயில்பவர்கள் யார்? நிறுவனத்தை நடத்துகின்ற குறிப்பிட்ட மேல்சாதியினர்தான் பெரும்பான்மையாகப் படிக்கிறார்கள்.

தமிழகம் முழுவதும் 'இந்துக் கல்லூரிகள்' என்ற பெயரில் ஏராளமான நிறுவனங்கள் உண்டு. நாகர்கோவில் மற்றும் திருநெல்வேலியில் இருக்கும் 'இந்துக் கல்லூரிகள்' சைவ வேளாளருக்குச் சொந்தமானவை. ஆசிரியர் நியமனத்திலிருந்து, மாணவர் சேர்க்கை வரை சைவப் பிள்ளையினருக்குத்தான் முன்னுரிமை. அதைப்போல 'ஆதித்தன் குரூப்' நடத்தும் கல்லூரிகளில் நாடார்களுக்குத்தான் முதல் மரியாதை. தென் மாவட்டக் கலவரங்களின்போது பல தேவர் கல்லூரிகளில் படித்த தாழ்த்தப்பட்ட மாணவர்கள் தூக்கி எறியப்பட்டனர். அத்துடன் அவர்கள் கல்வி வாழ்க்கையும் முடிந்தது.



இப்படி தமிழகத்தின் வட்டார மேல்சாதியினரால் நடத்தப்படும் 'இந்துக்கல்லூரிகளில்' தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இடம் கிடைப்பது குதிரைக் கொம்புதான். சென்ற ஆண்டு சுய நிதிக் கல்லூரிகளின் இடஒதுக்கீடு மற்றும் கட்டணங்களை முறைப்படுத்தும் சட்டத்தை தமிழக அரசு கொண்டுவந்தது.

அரசு பதவியில், இடஒதுக்கீட்டிற்காக சமூகநீதி பேசும் மேல்சாதிக்காரர்களெல்லாம் - இச்சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தனர். காரணம் தங்கள் கல்விக் கொள்ளை பறிபோகும் என்பதால்தான். ஆக 'இந்துப்' போர்வையில் நடத்தப்படும் இம்மோசடிகளை மறைப்பதற்கு, இந்து முன்னணியின் பிரச்சாரம் எப்படி உதவுகிறது என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே 'காசுக்கேற்ற கல்வி' என்பதே உண்மையான பிரச்சினை. ''தமிழ் வழிக்கல்வி வேண்டாம், (கிறித்துவ) ஆங்கில மொழிக் கல்விதான் வேண்டும்'' என்று கூறும் மெட்ரிக்குலேஷன் கல்வி சங்கம் ஒரு நாள் பள்ளி அடைப்பையே நடத்திவிட்டது. இந்தச் சங்கத்தின் நிர்வாகிகள் எல்லாம் 'இந்துக்கள்'தான். சங்கர மடம் துவக்க இருக்கும் மருத்துவக் கல்லூரியை எதிர்த்து அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். மாணவர்களில் பெரும்பான்மையினர் 'இந்துக்கள்' தான். 'இந்து நலன்' பேசும் இந்து மதவெறியர்கள் இத்தகைய பிரச்சினைகளில் மக்கள் நலனுக்கு விரோதிகளாக இருக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது.

**கிறித்துவ - இசுலாமிய கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களில் பெரும்பான்மையினர் 'இந்துக்கள்'தான். ஆனால் 'இந்துக்களால்' நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் பயில்பவர்கள் யார்? நிறுவனத்தை நடத்துகின்ற குறிப்பிட்ட மேல்சாதியினர்தான் பெரும்பான்மையாகப் படிக்கிறார்கள்.**

இந்து முன்னணி கவலைப்படும் அளவிற்கு இந்துக் கல்வி நிறுவனங்கள் இல்லாமலில்லை. சங்கரமடம், சைவ ஆதீனங்கள், பங்காரு, சாயிபாபா, ஆனந்தமாயி, சின்மாயானந்தா, சித்பவானந்தா, ராமகிருஷ்ணா மிஷன், விவேகானந்தா கேந்திரா, ஆர்.எஸ். எஸ்.இன் சேவாபாரதி, ஜெயலலிதா, சசிகலா, உடையார், வாழப்பாடி, தங்கபாலு, விஸ்வநாதன், தம்பிதுரை, சோ. பாலகிருஷ்ணன் இன்னபிற வகையாராக்களெல்லாம் ஏராளமான கல்வி நிறுவனங்களை நடத்தி வருகின்றனர்.

இனி, இராம. கோபாலன் ஒரு உண்மையான இந்துவாக இருந்தால் - கீழ்க்கண்ட உண்மையான இந்து நலனுக்கான கோரிக்கைகளை முன் வைக்க வேண்டும்.

1. ஆர். எஸ். எஸ்., வி. ஹி. பரிஷத் நடத்தும் கல்வி நிறுவனங்களில் சம்ஸ்கிருத மொழியில்தான் கல்வி. மிலேச்ச, சூத்திர மொழிகளுக்கு இடமில்லை. மெக்காலே பாணியிலான கல்வித் திட்டத்திற்குப் பதில் வேத, உபநிடத, புராண, இதிகாச, மனுதர்மம் முதலியவைதான் கல்வித் திட்டம். இந்துக்களே அணிதிரண்டு வாருங்கள்!

2. இந்துக்கள் நடத்தும் கல்வி நிறுவனங்களில் மட்டும் இந்து மாணவர்களுக் கட்டணம் கிடையாது. அல்லது குறைவான கட்டணமே வசூலிக்க வேண்டும்.

3. கிறித்துவ, இசுலாமிய கல்விநிறுவனங்களில் - இந்துக்கள் யாரும் படிக்கக் கூடாது, பணியாற்றக் கூடாது!

—இப்படி ஆத்ம சுத்தியுடன் இந்து முன்னணி கோரிக்கைகளை முன்வைத்துப் போராட வேண்டும். போராடினால் இந்து மதவெறியர்களை ஒழிப்பதற்கு எவரும் மெனக்கெட வேண்டியதில்லை. 'இந்துக்களே' பார்த்துக் கொள்வார்கள்.

● ● ●

''பசுவை கோமாதா என்றும், காமதேனு என்றும் வணங்குகிற புண்ணிய பாரத பூமியில் - அரசின் புள்ளி விவரப்படி ஒவ்வொரு ஆண்டும்



படிப்பகம்

www.padippakam.com

இரண்டு கோடியே பதினேழு லட்சம் பசுக்கள் கொல்லப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் 29,500 பசுக்கள், எருதுகள் மற்றும் கன்றுக்குட்டிகள் படுகொலை செய்யப்படுகின்றன. ஒரு நிமிடத்திற்கு 20 கொலைகள் நடக்கின்றன. இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களாகவும், இந்த மண்ணின் மைந்தர்களாகவும் உள்ள இந்துக்களுக்கு இது மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. நமது நாடு சுதந்திரம் அடைந்து 42 ஆண்டுகள் ஆகியும் இந்தப் படுகொலை நீடித்து வருவது ஏன்? பசுக் கொலை செய்பவர்களில் பெரும்பாலோர் முஸ்லீம்களாயிற்றே, பசுக் கொலையை நிறுத்தினால் அவர்கள் வாக்களிக்காமல் போய் விடுவார்களோ என்ற அச்சத்தில் இந்த அட்டூழியத்தை அனுமதித்து வருகிறார்கள்.

— 'பசு வதைத் தடைச் சட்டம் ஏன்,' இந்து முன்னணி வெளியீடு பக்கம் - 1.

''பசுவைக் கொல்வதென்பது நம் மால் கற்பனை கூட செய்துபார்க்க முடியாத விசயம். ஆனால் துரதிஷ்டவசமாக தமிழ்நாடு பாழாகி வருகிறது. தள்ளுவண்டியில் வைத்து பசுமாமிச பிரியாணி, பசுமாமிசப் பக்கோடா, பசுமாமிச சூப் என்று விற்கிறார்கள். யார் விற்கிறார்கள் என்று சொல்லத் தேவையில்லை. ஆனால் யார் வாங்கி சாப்பிடுகிறார்கள் — நமது இந்து இளைஞர்களே வாங்கிச் சாப்பிடுகிறார்கள். காரணம் அவர்களுக்குப் பசுவைச் சாப்பிடுவதும் தாயை வெட்டிச் சாப்பிடுவதும் ஒன்றுதான் என்பது தெரியவில்லை.

— "இந்துக்களுக்கு உரிமை கிடையாதா?," இந்து முன்னணி வெளியீடு, பக்கம் :8.

''பசுவைக் காப்போம்! பாரதம் காப்போம். கோயிலுக்குத் தானமாக வரும் பசுக்களைக் கசாப்பு கடைகளுக்கு விற்பதைத் தடை செய்யக் கோரியும், பசு காப்பகம் அமைத்து பசுக்களைப் பராமரிக்க தமிழக அரசை வற்புறுத்தி இந்து முன்னணி ஆர்ப்பாட்டம்.''




''மாட்டுத் தலையை வைத்து ஆர்.எஸ்.எஸ். கொன்ற மனிதத் தலைகள்தான் இந்நாட்டின் மாபெரும் அவமானம்.'' மேலே, முசுலீம்கள் மீதான துவேசத்தைக் கிளப்ப இந்து முன்னணி வெளியிட்டிருக்கும் சிறுநூல்.

— இந்து முன்னணியின் சமீபத்திய சுவரெழுத்து.

எதற்கும் உதவாத மாடுகள்தான் தற்போது இறைச்சிக்காகக் கொல்லப்படுகின்றன. கோவிலுக்குத் தானமாக வரும் மாடுகள் கசாப்புக் கடைக்குப் போகிறது என்பதின் பொருள் என்ன? அவை விவசாய வேலைக்குப் பயன்படாத, மடி வற்றிய, எலும்பும் தோலுமாக உள்ள மாடுகள் என்றுதானே பொருள். பக்தர்களின் இத்தகைய மோசடிக்கு அரசாங்கம் என்ன செய்யும்?

இருப்பினும் பா.ஜ.க கூட்டணியின் தமிழகத் தலைவர் கருணாநிதி தற்போது ஆரம்பித்துவரும் உழவர் சந்தைக்குப் பக்கத்திலேயே ஒரு பசு காப்பகம் வைக்கக் கூடும். மேலும் 'வயது' காரணமாக சைவ உணவுப் பழக்கத்துக்கு மாறிவரும் கருணாநிதி இதையும் அனுதாபத்தோடு பரிசீலிப்பதில் பிரச்சினை இல்லை. அதாவது கருப்புத் துண்டு அரசியலை மஞ்சள் துண்டு அரசியலாக மாற்றிய கலைஞரின் 'முதிர்ச்சியை' யாரும் புரிந்து கொள்ள முடியும். இனி 'பசுக் கொலை'யைப் பரிசீலிப்போம்.

கவனியுங்கள், இந்து மதவெறியர்கள் பசுவைப் பற்றி மட்டும் கவலைப்படுகிறார்கள். என்றால் காளை மாடுகளைக் கொல்லலாமா? பசுவைக் கொல்பவருக்கு தண்டனை எது கொடுத்தாலும் முதலில் இந்துமத வெறியர்களைத்தான் தண்டிக்க வேண்டும். வேத, இதிகாச, புராண, உபநிடத, மனுஸ்மிருதி மற்றும் புத்த - சமண மத இலக்கியங்கள் அனைத்தும் பண்டைய 'இந்துக்கள்' மாட்டுக்கறி தின்னும் உலகளாவிய பழக்கத்தைக் கொண்டவர்களே என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கின்றன.

ரிக் வேத தெய்வமான இந்திரன் டன் கணக்கில் 'பசு மாமிசம்' விழுங்கியதாக பல சுலோகங்கள் தெரிவிக்கின்றன. இராமாயணம் எழுதிய வான்மீகி தனது ஆசிரம விருந்தினர்களுக்கு மாட்டுக்கறி விருந்தளிப்பது வழக்கம் என இராமாயணம் தெரிவிக்கின்றது. 'கோமேத' யாகத்தில் கொல்லப்படும் மாட்டின் பாகங்கள் பார்ப்பனப் பண்டாரங்களின் சமூக அந்தஸ்திற்கேற்ப பங்கிடப்பட்டதாக 4 வேதங்களும் குறிப்பிடுகின்றன.

பிரம்மா, பசுவைப் படைத்ததே வேள்வியில் கொல்லத்தான் என்று கூறும் மனுஸ்மிருதி, உலக நன்மைக்கான வேள்வியில் கொல்லப்படும் பசுவை பிராமணன் உண்ணலாம்' என்றும் தெரிவிக்கின்றது. அதிலும் யக்ஞவல்கியர் எனும் உபநிடத முனிவர், கன்றுக்குட்டி இறைச்சியைப் பற்றி நமது ஆனந்த விகடன் சாப்பாட்டு ராமன்களைப் போல ரசனையுடன் விவரிக்கிறார்.

எனவே பசுவதையைத் தடை செய்யுமுன் அதைப் பிரச்சாரம் செய்யும் வேதம், புரானம், மனுஸ்மிருதி அனைத்தையும் தடை செய்ய வேண்டும். வேத காலந்தொட்டு பார்ப்பனர்களுக்குக் கொடுக்கப்பட்ட கோதானம், நடத்தப்பட்ட மாட்டுக்கறி வேள்வியினால் விவசாயமே சீர்குலைவடையும் அளவுக்குச் சென்றது. மக்களின் வாழ்வை பிணியாய் அரித்துத் தின்ற பார்ப்பனியத்தின் சடங்கு - வேள்விகளை எதிர்த்து புத்த - சமண மதங்கள் எழும்பின.

இம்மதங்களின் பார்ப்பன எதிர்ப்பும் - புலால் எதிர்ப்பும் மக்கள் ஆதரவு பெறுவதன் அடிப்படையில் அதுவே. பின்னர் இம்மதங்களைச் செரித்துக் கொண்ட பார்ப்பனியம் புலால் மறுப்பையும் திருடிக் கொண்டது. இருந்தாலும் இந்தியா முழுவதும் பார்ப்பன - மேல் சாதியினரிடையே ஒரே மாதிரியான சைவ உணவுக் கொள்கை இன்றும் கிடையாது. காசுமீரப் பண்டிதர்கள், வங்கத்துப் பார்ப்பனர்கள், தக்காணப் பார்ப்பனர்கள் போன்றோர் புலால் உணவுப் பழக்கத்தை கொண்டவர்கள்தான்.

புத்தர், மகாவீரரின் முயற்சியால் பார்ப்பனர்களிடமிருந்து மாடுகள் காப்பாற்றப்பட்ட பின்பே பார்ப்பனிய இலக்கியங்கள் புலால் மறுப்பை ஏற்றுக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு, மாட்டுக் கறியின்மேல் துவேசத்தையும் பிரச்சாரம் செய்தன. அதற்கும் காரணம் உண்டு.

சாதிப்படி நிலைக்கு வெளியேயும், ஊருக்குப் புறத்தேயும் இருந்த பஞ்சமர்கள், செத்த மாட்டைத் தின்பதற்கும், புதைப்பதற்கும் பார்ப்பனியத்தால் பணிக்கப்பட்டனர். இதை வைத்தே தாழ்த்தப்பட்ட மக்கள் பிறப்பிலும், தொழிலிலும் இழிவானவர்கள் என்பதை பார்ப்பனியம் இன்றுவரை பிரச்சாரம் செய்து வருகிறது. ''ஆவுரித்துத் தின்னும் புலையர்'' என்று தாழ்த்தப்பட்டோரை ஏசுகிறது தேவாரம்.

இப்படி தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான அடக்குமுறைக்கு பயன்பட்ட மாடு தற்போது முசுலீம் எதிர்ப்புக்கும் பயன்படுகிறது. இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்து மத தேசியத்தை உருவாக்க முனைந்த மதவாதிகள்தான் பசுவுக்கு ஒளிவட்டம் போட்டு பசுவதையைத் தடைசெய்ய வேண்டும் எனப் பேச ஆரம்பித்தார்கள். வெள்ளையர்களிடம் அதிகாரமிழந்த மராத்திய சித்பவனப் பார்ப்பனர்களே இதைத் துவக்கினர்.

முசுலீம்கள் மீதான துவேசத்துடன் இந்து மதத்தையும், ஆங்கிலேய எதிர்ப்பையும் உருவாக்க முனைந்த திலகர் தான் மாட்டுப் பிரச்சினைக்கும் பிள்ளையார் சுழிபோட்டார். சிவாஜி வழிபாடு, விநாயகர் ஊர்வலம் போன்றவையும் திலகரின் கைங்கிரயங்கள்தான் என்பதை வாசகர்கள் அறிந்திருக்கலாம்.

அயோத்தி தொடங்கி பசுவதை வரை இந்து முசுலீம் பிரிவினையை வரவேற்ற வெள்ளையர்களும் இத்தகைய போக்குகளை ஊக்குவித்தார்கள். அதன் பின் வட இந்திய நகரங்களில் 'இந்துக்களின் புனிதச் சின்னமான பசுவை முசுலீம்கள் கொன்று கோவிலில் வீசினார்கள்' என்ற வதந்தியினால் மட்டும் பல கலவரங்கள் நடந்திருக்கின்றன. பிரிவினைக்குப் பின் 60 களில் சங்க பரிவார வானங்கள் நடத்திய பசுவதை எதிர்ப்பு இயக்கத்தின் போதும் ஏராளமான கலவரங்கள் நடந்தன.

மாட்டுத் தலையை வைத்து ஆர்.எஸ்.எஸ். கொன்ற மனிதத்தலைகள்தான் இந்நாட்டின் மாபெரும் அவமானம். கேவலம் மாட்டிற்காக முதலைக் கண்ணீர் உதிர்க்கும் இந்து மதவெறியர்கள் தான், ஆயிரக்கணக்கான முசுலீம்களின் உதிரத்தை உறிஞ்சியவர்கள் என்பது வரலாறு.

ஆர்.எஸ்.எஸ்.சின் கலவரப்பட்டியலில் மட்டுமல்ல, அரசியல் சட்டத்தின் வழிகாட்டும் கோட்பாட்டிலும் பசுவதையைத் தடைசெய்ய வேண்டுமெனக் கூறியிருக்கிறார்கள். எனவே அவர்களின் முசுலீம் எதிர்ப்புக் கலவரத்தில் பசுவதைப் பிரச்சினையின் பங்கைப் புரிந்து கொள்ள வேண்டும். எந்தப் பிரச்சினையும் இல்லாத போது இதை கையிலெடுப்பார்கள். கோமாதா, புனிதம், மதம் என்ற போர்வையில் பெரும்பான்மை சமூகத்தினை ஊடுறுவும் பசுவதையை அதன் யதார்த்த நிலையிலிருந்து இனி பரிசிலிப்போம்.

குரங்கிலிருந்து மாறிய மனிதனின் கை, கால்கள் நேர்த்தியடைந்து, முதுகுத் தண்டு நிமிர்ந்து, மூளை வளர்ச்சியடைவதற்கும் இறைச்சி பெரும்பங்காற்றியது. ஆரம்பகால மனிதனது கடும் உழைப்பிற்கும், போராட்டத்திற்கும் மூளை வளர்ச்சிக்கும் தேவையான புரதத்திற்கும் இறைச்சிதான் முக்கிய காரணம்.

இன்றைக்கு பார்ப்பன - மேல்சாதியினரைத் தவிர உலகமே மாட்டுக் கறியைத் தின்கிறது. மாடு மட்டுமல்ல, ஆடு, குதிரை, ஒட்டகம், நாய், முயல், பலவித பறவைகள் என்று எதெல்லாம் கிடைக்கிறதோ அதெல்லாம் உட்கொள்ளப்படுகின்றன. அவை கால்நடை உற்பத்தி, உற்பத்தியில் அவற்றின் பங்கு, காலநிலை, உணவுப் பழக்கம் இவற்றுக்கேற்ப மாறுபடலாம். நாட்டுக்கு நாடு இறைச்சியின் பெயர்தான் மாறுபடுகிறதே தவிர ஒன்று உயர்ந்தது, மற்றொன்று தாழ்ந்தது என்றெல்லாம் கிடையாது.

கணிப்பொறி வேலைக்காக நம்மூர் அம்பிகள் ஈக்களாய் ஒட்டிக் கொள்ளும் அமெரிக்காவில்தான் சிகாகோ நகரம் உள்ளது. இறைச்சிக்காக நவீன ஆலைகளில் தினமும் பல்லாயிரம் மாடுகள் கொல்லப்படும் இந்நகரம் 'உலகின் கொலைக் களம்' என்றழைக்கப்படுகிறது. ஆதலால் கோமாதாவைக் கொலை செய்யும் அமெரிக்காவிற்கு இந்துக்கள் போகக் கூடாது என இந்து முன்னணி தடை போடுமா?

**பசுவைக் கோமாதா என்றும், 33 கோடித் தேவர்கள் குடியிருக்கிறார்கள் என்றும் கூறுபவர்கள், அது செத்தால் மட்டும் தூக்கிச் செல்வதற்குப் பறையர்களையும், சக்கிலியர்களையும் அழைப்பது ஏன்?**

பார்ப்பனியத்தின் தீண்டாமைக் கருத்துக்கு அப்பாற்பட்டு, விவசாயத்திற்கு உதவும் மாடுகளைக் கொன்று உண்பது நமது விவசாயிகளிடமும் பொதுவில் இல்லை. அதேசமயம் விவசாயத்திற்கு உதவாத மாடுகளை வீணே பராமரிக்கத் தேவையில்லாத விவசாயிகள் அதை விற்கிறார்கள். அவையே கறிக்காக வெட்டப்பட்டு நாடெங்கும் விற்கப்படுகின்றன. நகர்ப்புறங்களில் மாட்டுக்கறி என்பது ஒரு சாதாரண உணவுதான். ஆடு, கோழி இறைச்சியின் விலை மிகவும் உயர்ந்துவிட்ட நிலையில் மலிவான மாட்டுக்கறிதான் நமது உழைக்கும் மக்களின் புரதத் தேவையை ஈடு செய்கிறது. எனவே கறிக்காக பிராய்லர் கோழி வளர்ப்பது போல, இறைச்சிக்கென்றே மாடுகள் வளர்ப்பது, ஆலைகள் நிறுவுவதற்கு அரசை நாம் வலியுறுத்த வேண்டும்.

பசு புனிதமென்றால், மீன் விஷ்ணுவின் மச்சாவதாரம், கோழி முருகனின் அவதாரம், ஆடு கிருஷ்ணன் மேய்த்தது என அனைத்தையும் தடை செய்யலாமா? மாட்டுக்கறி தின்னக் கூடாது என்பவர்கள் கோமாதாவைக் கொன்று தோலை உரித்து செருப்பு போட்டு மிதிக்கலமா? கடவுளே பிள்ளைக் கறியை ஏற்கும்போது, பக்தன் மட்டும் மாட்டுக் கறியைத் தின்னக் கூடாதா? எனவே மாட்டுக்கறிப் பிரச்சினையில் முசுலீம் எதிர்ப்பும், தாழ்த்தப்பட்ட மக்களின் மீதான துவேசமும் இருப்பதால், சாதியை மறுக்கவும், இந்து மதவெறியர்களின் அவதூறை ஒழிக்கவும். மாட்டுக் கறியைத் தின்னாதவர்களும் தின்று பழகுக!

பசுவைக் கோமாதா என்றும், 33 கோடித் தேவர்கள் குடியிருக்கிறார்கள் என்றும் கூறுபவர்கள், அது செத்தால் மட்டும் தூக்கிச் செல்வதற்குப் பறையர்களையும், சக்கிலியர்களையும் அழைப்பது ஏன்? பூதேவர்களான பார்ப்பனரும், உயர் சாதியினரும், கோமாதா பஜனை பாடும் சங்கராச்சாரியும், இராம. கோபாலனும் - செத்த கோமாதாவைத் தூக்கி அடக்கம் செய்து தமது 'இந்து' உணர்வை நிரூபிக்கட்டும்.

நாம் பசுவதைத் தடைச் சட்டம் நீக்கப் போராடுவோம்.

● தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

*லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்று நிகராகுவா. 1979-ஆம் ஆண்டு ஜூலை 19-ஆம் நாள், நிகராகுவாவின் சர்வாதிகாரியும், அமெரிக்க உதவியுடன் ஆட்டம் போட்டவனுமாகிய அனஸ்டேசியோ சமோசாவின் ஆட்சி வீழ்த்தப்பட்டு மக்கள் வெற்றி கண்ட மகத்தான நாள். இத்தேசியப் புரட்சியில் பங்கு கொண்ட இடானியா என்ற பெண் போராளி 8.3.1979 தேதியில் தனது மகளுக்கு எழுதிய கடிதம் கீழே தரப்படுகிறது. 16.4.1979 அன்று சமோசாவின் இராணுவத்தால் கொல்லப்பட்டபோது இப்போராளியின் வயது 24.*

எனது அன்பு மகளே,

எல்லா இடங்களிலும்
மக்களுக்கு
இது ஒரு
முக்கியமான நேரம்
இன்று நிகராகுவாவில்,
நாளை
பிற லத்தீன் அமெரிக்க நாடுகளில்,
பிறகு உலகம் முழுவதும்.

புரட்சி
ஒவ்வொருவராலும் தரமுடிந்த
அனைத்தையும் கோருகிறது.
நமது மனசாட்சியும்தான்.

தனி மனிதர்களான நாம்,
பிரத்யேகமாகச் செயல்பட்டு,
இந்த உருவாக்கத்தில்
இயன்றளவு
உதவிட வேண்டி,
வலியுறுத்துகிறது.

விரைவிலேயே
ஒரு நாள்,
சக மனிதர்களைப் போல
வளர்ந்து முன்னேறி,
விரோதிகளாக அல்லாமல்,
சகோதர சகோதரிகளாக,
சுதந்திரமான சமூகத்தில்
வாழ்வது,
உனக்குச் சாத்தியமாகும்
என்று நம்புகிறேன்.

அப்போது உன்னுடன்
கைகோர்த்து
வீதிகளில் செல்லும்போது,
எல்லோரும் புன்னகைப்பதை
குழந்தைகள் சிரிப்பதை
பூங்காக்களை
நதிகளையெல்லாம்
பார்க்க விரும்புகிறேன்.

நமது மக்கள்
மகிழ்ச்சியான குழந்தைகளாக
வளர்வதையும்,
புதிய மனிதர்களாகவும்,
எங்குமுள்ள மக்களுக்கு
ஆற்ற வேண்டிய
கடமைகளை
உணர்ந்தவர்களாக மாறுவதையும்,
கண்ணுற்ற நாம்
மகிழ்ச்சியுடன்
புன்னகை செய்வோம்.

நீ
அனுபவிக்கப் போகும்
அமைதியும்,
சுதந்திரமும் கொண்ட
சொர்க்கத்தின் மதிப்பை
நீ
அறிந்து கொள்ள வேண்டும்.
நான்
ஏன் இதைச் சொல்கிறேன்?

ஏற்கெனவே
நமது மக்கள்
வீரத்தில் சிறந்தவர்கள்.
சமூகத்தின் மீதும்,
சுதந்திரத்தின் மீதும்,
அமைதியின் மீதும்,
தமக்குள்
ஆழ்ந்த அன்பினால்,
நாளைய தலைமுறையினருக்காகவும்,
உன்னைப் போன்ற
குழந்தைகளுக்காகவும்,
தங்கள் ரத்தத்தைத்
தந்து விட்டார்கள்,
மிக்க விருப்பத்துடன்.

நமது
அழகான நிகராகுவாவின்
எத்தனையோ
ஆண்களும் பெண்களும்
குழந்தைகளும்,
அடக்குமுறையிலும்
அவமானத்திலும்
வேதனையிலும்
துடிப்பது போல,
இனி
ஒருபோதும்
துடிக்கக் கூடாது
என்பதற்காக
அவர்கள்
தங்கள் உயிரைக்
கொடுத்து விட்டார்கள்.

ஒரு வேளை
நான்
இவற்றையெல்லாம்

**மகளே வா,**
**உன் அழகு முகத்தை என**
**உன் சிரிப்பையும் நமது ய**
**நான் போராடுவதற்கான**

உன்னிடம் நேரில்
சொல்ல முடியாமல் போகலாம்.
வேறொருவர்
சொல்வதும்
முடியாது போய்விடலாம்.
என்பதால்
உன்னிடம் சொல்கிறேன்.

அன்னை என்பவள்
பிள்ளைகளைப் பெற்று
வளர்ப்பவள் மட்டுமல்ல.
எல்லாக் குழந்தைகளும்
தனது கருப்பையிலிருந்து
தோன்றியவர்கள் போல,
எல்லா
மக்களின் வலிகளையும்
அன்னை
என்பவள் நன்கறிவாள்.

ஒரு நாள்
நீ
மனித குலத்தின் மீது
பேரன்பு கொண்ட





படிப்பகம்

www.padippakam.com

## ...காட்டு!
## ...த்தையும் பிணைத்து
## ...யைக் கொடு!

உண்மையான பெண்ணாக
உருவாக வேண்டும்,
என்பதே
எனது விருப்பம்.

நீதியை
யார் எப்போது
குலைக்க முயன்றாலும்,
அதை
எதிர்த்து நின்று காப்பது
எப்படி என்று
உனக்கு
எப்போதும் தெரிந்திருக்க வேண்டும்.

அப்படி நீ
மாறவேண்டுமானால்,
நம் நாட்டுப் புரட்சியின்
தலைவர்களும்,
பிறநாட்டுப் புரட்சியின்
மாபெரும் தலைவர்களும்
எழுதிய புத்தகங்களை,
நீ
படித்துப்
புரிந்து கொள்ள வேண்டும்.



அனைத்திலும் சிறந்தவற்றைத்
தேர்ந்தெடுத்து
நடைமுறைப்படுத்தி
அதன் மூலம்
எப்போதும்
வளர்ச்சியைத் தொடர வேண்டும்.
நீ
இதைச் செய்வாய்,
உன்னால்
முடியுமென்று
எனக்குத் தெரியும்.

உனக்கென
வார்த்தைகளையும்
வாக்குறுதிகளையும்
வெற்றுப் போதனைகளையும்
விட்டுச் செல்ல
நான்
விரும்பவில்லை.

உனக்கென நான்
விட்டுச் செல்ல நினைப்பது
வாழ்க்கையைப் பற்றிய
ஒரு கண்ணோட்டத்தை,
என்னுடையதையும்
(அதுதான் சிறந்தது
என்று நான்
நினைக்கவில்லை
என்றாலும்)
எனது
சான்டினிஸ்டா
சகோதர - சகோதரிகளுடையதையும்
உனக்கு
விட்டுச் செல்கிறேன்.
அதை
எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று
நீ
கற்றுக் கொள்வாயென்று
எனக்குத் தெரியும்.

சரி,
என் குண்டுப் பெண்ணே,
உன்னை
மறுபடியும்
பார்க்கும் பேறு
எனக்குக் கிடைத்தால்,
அதுவும் கூட சாத்தியம்தான் -
வாழ்க்கை பற்றியும்
புரட்சி பற்றியும்
நாம்
நீண்ட நேரம் பேசுவோம்.

நமக்குக் கொடுக்கப்படும்
செயல்களை
கடினமாக உழைத்து
நிறைவேற்றுவோம்.
கிடார் வாசித்து,
பாட்டுப் பாடி,
ஒன்றாக விளையாடுவோம்
இவற்றின் மூலமாக
நாம்
ஒருவரையொருவர்
மேலும் புரிந்து கொள்வோம்.
ஒருவரிடமிருந்து
மற்றவர்
கற்றுக் கொள்வோம்.

வா,
பூவையும்
சுதந்திரத்தையும் போன்ற
உன் அழகு முகத்தை
எனக்குக் காட்டு!

உன் சிரிப்பையும்
நமது யதார்த்தத்தையும்
பிணைத்து
நான் போராடுவதற்கான
சக்தியைக் கொடு!

தினமும்
உன்னைப் பற்றியே
நினைக்கிறேன்.
எப்போதும்
நீ
எப்படியிருப்பாய்
என்று
கற்பனை செய்கிறேன்.

எப்போதும்
உன் மக்களை
மனித குலத்தை
நீ நேசி

உன் அம்மாவின்
அன்பு முழுவதும் உனக்கே.

★ இடானியா.

''என்றென்றைக்குமான
வெற்றி கிட்டும்வரை
சுதந்திரத் தாய்நாடு
அல்லது வீரமரணம்''

● 'சாண்டினோவியப் புதல்விகள்'
ஆங்கிலப் புத்தகத்திலிருந்து
மொழி பெயர்ப்பு: அமரந்தா.

நன்றி: புதிய சமதர்மம்

(கொழும்பிலிருந்து வெளிவரும்
தமிழ் மாத இதழ்)



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் மக்கள் இசை விழா சில கேள்விகள்

தமிழ் மக்கள் இசை விழாவிற்கு இது ஏழாவது ஆண்டு. தியாகய்யர் விழா மற்றும் தமிழிசைக் களவு குறித்து நாம் பல முறை விளக்கியிருந்தாலும், இவை குறித்த அறியாமையே பெரிதும் மேலோங்கி இருப்பதால் மீண்டும் விளக்குகிறோம்.

- **'தமிழில் பாடு' என்கிறீர்கள். தியாகய்யர் தன் தாய்மொழியின் தெலுங்கில் மட்டுமே கீர்த்தனைகளைப் பாடியிருக்கிறார். தியாகய்யர் உற்சவத்தில் அதைத்தானே பாட முடியும்?**

மேலோட்டமாகப் பார்த்தால நியாயம் போலத் தெரிகிற கேள்வி இது. ஆனால் தியாகய்யர் தன் தாய் மொழியான தெலுங்கில் மட்டும் பாட்டெழுதவில்லை. சமஸ்கிருதத்திலும்தான் எழுதினார். தமிழில் ஏன் எழுதவில்லை என்பதற்கு அது இழிமொழி எனப் பார்ப்பனர்களால் கருதப்பட்டதுதான் காரணம்.

தியாகய்யருக்கு முன்னால் தமிழில் செவ்வியல் இசை இருந்தது. ஆதி மும்மூர்த்திகள் எனப்படும் சீர்காழி மூவர் இருந்தனர்; தேவாரம் இருந்தது. தமிழ் செவ்வியல் இசை மரபை இசை வேளாளர்களும், ஓதுவார்களும் வளர்த்துள்ளனர். இவற்றிலிருந்துதான் தியாகய்யர் தனது இசையை வளர்த்துக் கொண்டார்.

அதுமட்டுமல்ல; சிலப்பதிகாரத்திற்கும் முந்தைய செவ்வியல் இசை மரபு தமிழுக்கு உண்டு. அந்த மரபைக் களவாடி உருவாக்கப்பட்டதுதான் கர்நாடக இசை. இதைத் தஞ்சை ஆபிரகாம் பண்டிதரும் இன்னும் பல அறிஞர்களும் பல ஆய்வு நூல்கள் மூலம் அம்பலப்படுத்தியுள்ளனர். இவற்றுக்கு யாரும் பதில் சொன்னது கூட இல்லை.

கர்நாடக இசையின் இலக்கண நூலான சங்கீத ரத்னாகரம் 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததுதான். ஆனால் தமிழகத்தின் இசையே கர்நாடக இசைதான் என்ற வரலாற்றுப் புரட்டு இன்றுவரை பார்ப்பனர்களால் சாதிக்கப்பட்டு வருகிறது.

திருவையாற்றில் மட்டுமின்றி கர்நாடக இசைக் கச்சேரி எதிலும் தமிழ்ப் பாடல் பாடப்படுவதில்லை, அல்லது துக்கடாவாகப் பாடப்படுகிறது என்ற நிலையை மாற்ற தோன்றியதுதான் தமிழிசை இயக்கம். இன்னமும் இந்த நிலையில் பெரிய மாற்றமில்லை.

எனவே தியாகய்யர் விழாவில் 'தமிழில் பாடு' என்று முழக்கம் எழுப்பிய தன் நோக்கம் அங்கு ஏதோ இரண்டு தமிழ்ப் பாட்டுகளைப் பாட வைக்க வேண்டும் என்பது அல்ல; 'களவாடிய இசையே கர்நாடக இசை' என்ற வரலாற்று உண்மையை நிலைநாட்டுவதற்கான போராட்டத்தின் துவக்கம்தான் அது.

- **நீங்கள் கூறுவது போல அது களவாடிய இசையாக இருந்தால் இத்தனை தமிழறிஞர்கள் இருக்கிறார்களே அவர்கள் கேட்டிருக்க மாட்டார்களா? அந்த விழாவில் கலந்து கொள்பவர்களில் பலர் தமிழர்கள் தானே!**

மற்றவர்கள் கேட்கவில்லையென்பதால் இசைக் களவு இல்லையென்றாகி விடாது. அவாளை அனுசரித்துப் போகின்றவர்களும், அங்கே கச்சேரி செய்பவர்களும் பிறப்பால் பார்ப்பனராக இல்லையெனினும் சிந்தனையாலும் வாழ்க்கையாலும் பார்ப்பனர்களாக மாறியவர்கள். "நாயும் வயிறு வளர்க்கும்" என்ற பாடலை பாரதிதாசன் இவர்களுக்காகத்தான் எழுதியிருக்கிறார்.

1917-இல் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் வெளியிட்ட 'கருணாமிருத சாகரம்' என்னும் ஆய்வு நூல், தஞ்சையில் ஜெயலலிதா நடத்திய உலகத் தமிழ் மாநாட்டில் கூட மறுபதிப்புச் செய்யப்பட்டது. ச,ரி,க,ம,ப,த,நி என்ற ஏழு சுரங்களுமே தமிழ்ச் சுரங்கள்தான் என்ற பண்டிதரின் ஆய்வை அன்றைய திருவையாறு சமஸ்கிருதக் கல்லூரியின் முதல்வரே (பார்ப்பனர்) ஏற்றுக் கொண்டிருக்கிறார்.



இவையெல்லாம் அறிஞர்களுக்கும், பல பாடகர்களுக்கும் தெரிந்ததுதான். இருப்பினும் அவர்கள் ஏன் சொரணை கெட்டிருக்கிறார்கள் என்று கேட்க வேண்டுமேயொழிய, அவர்களுக்கே சொரணை இல்லாதபோது உங்களுக்கு மட்டும் என்ன என்று கேட்பது சரியல்ல.

- **இப்படி தியாகய்யர் விழாவை எதிர்ப்பதை விட்டுவிட்டு, தமிழிசை இயக்கத்தார் செய்வது போல நீங்களும் உங்கள் தமிழ் மக்களிசையை ஆக்கபூர்வமாக வளர்க்கலாமே!**

தமிழ் மக்களிசையை ஆக்கபூர்வமாக எப்படி வளர்ப்பது என்பதை எங்கள் அறிவுக்கெட்டியவரை நாங்கள் செய்து கொண்டுதானிருக்கிறோம். தியாகய்யர் விழாவை அம்பலப்படுத்துவதால் அந்த வேலை ஒன்றும் நின்றுவிடாது.

நம்முடைய நாட்டைக் கொள்ளையடித்து அதன் விளைவாகவே முன்னுக்கு வந்த வெள்ளைக்காரன், இன்று இந்தியா முன்னேறுவதற்கு 'யோசனை' சொல்வதைப் போல இருக்கிறது இந்த யோசனை. தியாகய்யர் விழாவைக் கண்டு பொறாமைப்பட்டு அவர்களை நாம் வம்புக்கிழுக்கவில்லை. அவர்கள் நடத்திய இசைக் களவுக்குத்தான் விளக்கம் கேட்கிறோம்.

தமிழிசை இயக்கம் இந்தப் பிரச்சினையை முன்வைத்ததே இல்லை. மேலும் தியாகய்யர் உற்சவக் கமிட்டியும் திருவையாறு தமிழிசை விழாக் குழுவும் இரண்டறக் கலந்துவிட்டன. சென்னையில் மியூசிக் அகாதமி டி.டி. வாசுவும், தமிழசை சங்கப் புரவலர் ராமசாமிச் செட்டியாரும் தரகுப் பெருமுதலாளிகள். தியாகய்யர் விழாக்குழு தமிழ் மக்களிசைக்குக் குழி வெட்டுகிறதென்றால் தமிழிசைக்காரர்கள் மண்ணள்ளிப் போடுகிறார்கள். இந்த 'ஆக்கபூர்வமான' வேலையை நாம் செய்ய முடியாது.

- **நீங்களோ கம்யூனிஸ்டுகள், நாத்திகர்கள், தியாகய்யர் விழாவில் பாடப்படுவதோ பக்திப் பாடல்கள், அங்கே உங்களுக்கென்ன வேலை?**

தியாகய்யர் விழாவில் 'புரட்சிப் பாடல் பாடு' என்பதோ 'பகுத்தறிவுப் பாட்டு பாடு' என்பதோ நம் கோரிக்கையல்ல. 'தமிழில் பாடு' என்பதே கோரிக்கை. நாங்கள் இன்றுதானே கேட்கிறோம். இதற்கு முன்னர் இந்தப் பிரச்



படிப்பகம்

www.padippakam.com

- தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட தியாகய்யரின் உற்சவத்தில் தமிழில் பாட முடியுமா?
- உற்சவத்தை எதிர்ப்பதை விட்டுவிட்டு தமிழிசையை ஆக்கபூர்வமாக வளர்க்கலாமே?
- கம்யூனிஸ்டுகளுக்கும், நாத்திகர்களுக்கும் பக்திப் பூர்வமான உற்சவத்தில் என்ன வேலை?
- சங்கீதத்திற்கு சாதி, மொழி, பேதம் கிடையாதே!
- தெலுங்கு கீர்த்தனையை மறுப்பவர்கள், கிருஷ்ணா நீரையும், நெல்லூர் அரிசியையும் புறக்கணிப்பீர்களா?

சினையைக் கிளப்பியவர்களெல்லாம் இறை நம்பிக்கை கொண்டவர்கள் தானே! அவர்களது கோரிக்கையை ஏற்றிருந்தால் எங்களுக்கு வேலையே இல்லையே.

கோயிலுக்குள் தாழ்த்தப்பட்டோர் நுழையக்கூடாது என்பதும் கருவறைக்குள் சூத்திரன் நுழையக் கூடாது என்பதும் சாதி ஒடுக்குமுறைகள். சாதியை எதிர்ப்பவன் ஆத்திகனாக இருந்தாலும் நாத்திகனாக இருந்தாலும் அதைக் கேட்கத்தான் செய்வான். அதைப் போல இது தமிழ் மொழி, இனத்தின் மீதான பார்ப்பனீய ஒடுக்குமுறை. அனைத்து ஒடுக்கு முறைகளையும் எதிர்க்கும் கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் இதையும் எதிர்ப்போம்.

- **"சங்கீதத்திற்குச் சாதி, மொழி பேதம் கிடையாது" என்று தியாகய்யர் விழாக் குழுவின் செயலர் ஏ.கே. பழனிவேல் கூறுகிறாரே!**

பழனிவேலின் இசைவேளாளர் சமூகத்தினர் தியாகய்யர் விழா மேடைக்கே அனுமதிக்கப்படவில்லை; தெருவில் நின்றுதான் வாசிக்க வேண்டியிருந்தது. பிறகு உள்ளே வர அனுமதி கிடைத்தபோது உட்கார அனுமதியில்லை. உட்கார அனுமதி கிடைத்தபோதும் சட்டை போட அனுமதி இல்லை. சாதி ஆதிக்கம் இல்லாமல் வேறென்ன காரணம் இதற்கு? ஷேக் சின்ன மவுலானா போன்ற முஸ்லிம்களும், பெண்களும் கூட நாதசுரம் வாசிக்கிறார்களே, பார்ப்பனரில் நாதசுர வித்வான் யாரேனும் உண்டா? இல்லையெனில் அதற்கு காரணம் என்ன? காரணம் சாதி உணர்வல்லாமல் வேறென்ன!

மொழி பேதம் இல்லை என்கிறார் பழனிவேல். நாதசுரத்துக்குத்தான் மொழி கிடையாதே. அதிலாவது அவர் ஒரு தேவாரத்தை வாசிக்கட்டும் பார்ப்போம்.

தியாகய்யர் விழா மேடையில் மேல் நாட்டு இசைக்கருவியான வயலினையும், எலக்ட்ரானிக் தம்புராவையும் அனுமதிக்கிறார்களே. சுருதி பிறழாமல் வாசித்தாலும் உள்ளூர் இசைக் கருவியான பறையை அனுமதிப்பார்களா இந்தச் சாதிபேதம் பார்க்காத உத்தமர்கள்?

- **தெலுங்குக் கீர்த்தனைகளை மறுப்பவர்கள், ஆந்திரத்துக் கிருஷ்ணா நீரையும், நெல்லூர் அரிசியையும் புறக்கணிப்பார்களா என்று சில வித்துவான்கள் கேட்கிறார்களே!**

நெல்லூர் அரிசிக்காக தியாகய்யர் தான் வயலில் இறங்கி உழுதாரா? தெலுங்கு கங்கை திட்டத்துக்கு சங்கீத வித்வான்கள்தான் கால்வாய் வெட்டினார்களா? நதி நீர் ஒப்பந்தமோ, அரிசி வியாபாரமோ இரு அரசுகளுக்கிடையிலான வியாபார ஒப்பந்தம். கொடுக்கல் வாங்கல் பேரம். அவ்வளவுதான். நெல்லூர் அரிசிக்காகத் தெலுங்குப் பாட்டு பாட வேண்டுமென்றால் வளைகுடா பெட்ரோலுக்காக அல்லாவின் புகழ் பாடலமா? வித்துவான்கள் பதில் சொல்லட்டும்.

- **நீங்கள்தான் தியாகய்யர் விழாவை எதிர்க்கிறீர்கள். திருவையாற்றில் இருக்கும் உள்ளூர்க்காரர்கள் யாரும் எதிர்ப்பதாகத் தெரியவில்லையே!**

தியாகய்யர் விழாவிற்கு மாமா, மாமி, அத்திம்பேர், அம்பிகளெல்லாம் அமெரிக்காவிலிருந்து வருகிறார்கள். சென்னை, பம்பாய், டில்லியிலிருந்தெல்லாம் கூட வருகிறார்கள். ஆனால் உள்ளூர்க்காரர்கள் யாரும் வருவதில்லையே! வருபவர்களை விரல்விட்டு எண்ணி விடலாமே.



ஐந்தாறு நாள் விழா நடந்தால் ஏதோ கொஞ்சம் வியாபாரமாகும் என்று நினைக்கும் வியாபாரிகளும், ஜனாதிபதி கவர்னரெல்லாம் வருவது நம் ஊருக்குப் பெருமை என்று நினைக்கும் ஏமாளிகளும் அப்படி நினைக்கலாம். உலக அழகியாக யுக்தா முகி தேர்ந்தெடுக்கப் பட்டால் தேசத்துக்கே பெருமைஎன்ற முட்டாள் தனத்துக்கு மக்கள் இரையாகவில்லையா? அவமானத்தையே கவுரவமாகக் கருதிக் கொண்டிருப்போரில் பலர் 'படித்த' முட்டாள்கள் தான். 'பாமர' மக்களல்ல.

- **தியாகய்யர் மீது அபிமானம் கொண்டாவர்கள் தனிப்பட்ட முறையில் விழா நடத்துகிறார்கள். இது ஒன்றும் அரசு விழா அல்ல. அங்கே போய் நீங்கள் கோஷம் போடுவது என்ன நியாயம்?**

பார்ப்பனப் பண்பாட்டின் ஆதிக்கத்தை நிறுவுகின்ற விழாவாக ஆண்டு தோறும் கொண்டாடப்படுவதுதான் தியாகய்யர் ஆராதனை.

இந்த விழா வானொலி, தொலைக் காட்சிகளில் நேரடியாக அஞ்சல் செய்யப்படுகிறது; தேசிய அளவில் ஒலிபரப்பப்படுகிறது; தமிழக அரசு தஞ்சை வட்டாரத்தில் உள்ளூர் விடுமுறையும் அறிவிக்கிறது. ஆனால் அதே திருவையாற்றில் நடைபெறும் தமிழிசை விழாவிற்கோ இத்தகைய 'அரசாங்க மரியாதைகள்' எதுவும் கிடையாது.

தியாகய்யர் உற்சவம் அவாளின் தனிப்பட்ட விவகாரம் அல்ல. பகிரங்கமான அதிகார முறைகேடு. பச்சையான தமிழின ஒடுக்குமுறை; நம்முடைய உரிமைகள் மீதான தாக்குதல்.

இந்த அவமானத்தை இனியும் நாம் அனுமதிக்கலாகாது. "நமக்கு ஒரு எழவும் புரியாத கர்நாடக இசையை எவனோ பாடட்டும், எக்கேடும் கெட்டுப் போகட்டும்" என்று இதை அலட்சியப்படுத்தி விடக்கூடாது. இப்படிப்பட்ட மோசடிகளையும் அக்கிரமங்களையும் எதிர்த்துப் போராடாமல் விட்டதனால் தான், வரலாற்றுப் புரட்டுகளையே மூலதனமாகக் கொண்ட பாரதிய ஜனதா எனும் பார்ப்பனக் கும்பல் அதிகாரத்தைப் பிடிக்க முடிந்திருக்கிறது. ■



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை:

# விஷக்காலிகள்

● நிதி. கோமேதகம்

"ஏய்... சின்னண்ணா நம்மூர் கயினி வெளியில எலி புடிக்க வருவாரே பாவம் அவுரு, செத்துட்டார் தெரியுமா?...."

"யாரு வில்லியா...?...!" ஆச்சரியமாய் ஆரம்பித்த ஆதிகேசவன் சற்று யோசித்து "வில்லி போய் பாம்பு கடிச்சி செத்துட்டாரா?" நிறுத்தி நம்பிக்கையில்லாமல் கேட்டான்.

"இன்னா கிண்டல் பன்றயா நாய..." என்று கேலி, கோபம், ஆதங்கம், வேதனை அனைத்தும் கலந்த குரலில் மறுபடி மெதுவாகக் கேட்டான்.

"அய்ய... மூஞ்சப்பாரு எது எதுல கிண்டல் பன்னுவாங்கன்னு வெவஸ்தையே இல்ல உனக்கு" உதடுகள் துடிக்க புருவங்களை நெருக்கிக்கொண்டு சற்று கோபமாகவே ஷானு சொன்னாள்.

"இல்லம்மா எப்பேர்க் கொத்த பாம்புக் கடிக்கும் வெறும் பச்செல மருந்த குடுத்து, வைத்தியம் பாத்து செரியாக்குற வில்லி போய் பாம்பு கடிச்சி செத்துட்டார்னா நம்பவா முடியுது... "சிறிதே நம்பிக்கை வந்தவன் நினைவுகள் பின்னுக்கு ஓடின.

"உனக்கு தெரியுமா ஷானு... ம்... நீயெல்லாம் அப்ப பொறக்கவே இல்ல நானே அஞ்சாவுதுதான் படிக்கர(ன்)."

"ஒரு நாள் ராத்திரி நல்லா அம்மாச கருக்கல் பன்னெண்டு மணியிருக்கும்; திடீர்னு கோழிகத்தர சத்தம் கேட்டு இன்னாடா இன்நேரத்துல கத்துத காட்டு பூனை கீட்டுபூன வந்து புடிக்குதா, பொத்த கூடையால இல்ல கோழிகவுத்தம்னு துடிச்சிபுடிச்சி எழுந்து ஓடி கூடைய தொட்டுகீறாரு நைனா.

"சுருக்குனு குத்திக்கீது ஒடனே இருட்ல இன்னாடா குத்துதன்னு, பக்கத்துல தடவினா அடுப்புக்கு தறிச்சி வக்கும் வேலிக்காத்தான் முள்ளைகூட காணல சந்தேகம் வந்து. 'ஜ்ஜேய் பொண்ண கருக்காமலையா சீக்கரம் வெளக்க கொளுத்தியா, இன்னமோ சுருக் சுருக்குனு குத்துனமாரி இருந்திச்சி, ....ன்னதும் வாரிசுருட்டிக்கினு சித்தி ஓடி காலெ எக்க (காடா விளக்கு) கொளுத்தியாந்து பாத்தா. நல்லபாம்பு கோழிகாலபோட்டு வலுவா பின்னிக்கினு தலைய கூடை பொத்தல் வழியா வெளிய வுட்டு நட்டுகினு பாத்துங்கீது.

"இன்னா பண்ணுவ, சித்தி பாவம் 'கூவோ மொறையோன்னு' கத்தி கூச்சல் போட்டதுல நம்ம சந்து ஜெனம் பூரா கூடிப்போச்சி. மாரிமுத்து அவுங்க அப்பன் ஓடியாந்து, இடுப்புல கட்டியிருந்த அண்ணாகவுர அறத்து கடிவாய்க்கு மேல நல்லா விகிஞ்ஜி கட்டு போட்டாரு.

"நடந்தா வெசம் விறுவிறுன்னு ஏறி தலமாடு கொண்டுடும்னு, கட்டல்ல படுக்கவச்சி ரெண்டுபேரா தலமேலையே தூக்கிக்கினு ஓடனாங்க. நாங்கூடத்தான்...

"மணி ஒன்னு ஒன்ற இருக்கும், கொரல் குடுத்தத்தான் தாமசம், அந்த வில்லி அறக்க பறக்க எழுந்து வெளிய ஓடியாந்து, இன்னா ஏதுன்னு விஷயத்த கேட்டு. 'நீங்க யாருனா கடிவாய கடிச்சி வெசத்த உறிஞ்சி எடுத்தீங்களா சாமி...'ன்னதும், இவுங்க எல்லாரும் 'இல்லை..ய்யா கட்டுத்தான் போட்டோம்' னாங்க. அப்பல்லாம் நைனாவுக்கு ஒடம்பெல்லாம் தண்ணியா உட்டு தன்னமீறி போச்சி. கீரத்தண்டுமேரி வெலவெலன்னு உழுந்துட்டாரு.

"இந்த விசயத்த எல்லாம் கேட்டுக்குனே, சிடுக்கா நாழியில பச்செல மூலிகைய எடுத்தாந்து 'நாலு கடி' மருந்த உள்ளுக்கு குடுத்தாரு. நல்ல வேள வாந்தி வரல, வாந்தி மட்டும் வந்திருந்திச்சு ஆள கண்டுபுடிக்கறது அறிகண்ணாயமாயிட்டும் இருக்கும்.

"அன்னக்கி ராத்திரி வில்லிவூட்ட புள்ளகுட்டியெல்லாம் முழிச்சிக்கிச்சி. சும்மா சொல்லக்கூடாது பொழுது விடியரவெரிக்கும் ஒருத்தரும் கண்ணாட கண்ணு மூடல, அந்தாளு சம்சாரம் பாவம் அந்நேரத்துல சூடா சுக்காப்பி போட்டு போனஜெனம் பூராத்துக்கும் குடுத்தாங்க.

"நாங்கூட குடிச்சேன் நல்லா நெனப்பு கீது ஷானு" என்றவன் சொல்லும்போது இப்போதுதான் அந்த காப்பியை குடித்ததுபோல் ரசித்து எச்சிலை கூட்டிக் கூட்டி விழுங்கினான்.

"அத்தோடவா வுட்டாங்க, பாம்பு கடிபட்டவங்க இருவத்தினாலு மணி நேரம் தூங்கக்கூடாதுல்ல, அதால வில்லிவூட்டு பசங்க அவுங்க கொலதெய்வத்த வேண்டி கூத்தாடுறதும், வில்லிங்க வீரத்த கதையா சொல்லும் 'வில்லி வில்லி நாங்கத்தான் வேட்டக்காரு நாங்கத்தான்....' பாட்ட பாடறதும், ஒரே அமுக்களம்.

"பளபளன்னு பொழுது வெடிஞ்சதும் சூரியன கும்புட்டு ஒரு வேள மருந்த கைல குடுத்து, 'இனிமே கல்லால அடிச்சாலும் சாவு கெடையாது பயப்படாத கூட்டிம்போங்கம்மா" என்று சொன்னவர், "சொல்ல மறந்துட்டேன் மூணு நாளுக்கு உப்பில்லாத கஞ்சிதான் குடிக்கணும். நெனப்பு இருக்கட்டும் நாட்டு மருந்து பத்தியம் இல்லன்னா உசுருக்கு ஆபத்தாயிடும்"ன்னு தடித்த குரல்ல சொன்னார்.

சொன்னது சொல்லாங்காட்டியும், சித்தி அவர் கால்ல உழுந்து நீ நல்லா இருக்கணும் எப்பா, எனுக்கு மடிப்பிச்ச குடுத்த மவராசான்னு சொல்லிக்கினே எழுந்து, முந்தானியில முடிஞ்சி வச்சிருந்த பத்து ரூவாவ அவுத்து குடுத்தா.

"வில்லி நெருப்ப தொட்டதுபோல "எம்மா இன்னா காரியம் பன்ன எங்க கொலதேவத டேண்டமாரிய பத்தி உனுக்கு தெரியாதா, இந்த பூலோக மக்க(ள்) உசுரகாக்கற இந்த மருந்துக்கு கூலியா பச்சதண்ணிகூட வாங்கமாட்டோம்னு சத்தியவாக்கு பண்ணிட்டுதான், ஆத்தா நல்ல பச்சலமூலிகய வச்சி படைச்சிட்டு மருந்தையே அம்மியில வச்சி அரைப்போம். அவ வாக்க மீறுனா எங்க குடும்பத்த வரக்கா சொறக்காவா ஆக்கிடுவான்னு சொல்லி வானத்தைப் பார்த்து கும்பிட்டார்.

'உடனே என்ன மன்னிச்சிடு யாம் பத்தினி மாரிம்மா புத்திகெட்டன் பீயத்துன்னன்'னு இன்னாவோ ஆணைக்கி கட்டுப்பட்டாமாரி ரெண்டு கைகளாலும் கன்னத்தில் மாறிமாறி புத்தி போட்டுக்குனு அழுதுடிச்சி, சித்தி வூட்டுக்குப் போவ காலெடுத்து வச்சது திரும்பி, 'ஐயா மறந்தே பூட்டன் இவர கூட்டியார அவுசரத்துல பாம்பு எந்த பக்கம் போச்சின்னு அடிக்காம உட்டுட்டு ஓடியாந்துட்டம். இன்னிக்கி வூட்டான்ட வந்து அந்த கருமத்த புடிச்சாந்துடு சாமி, புள்ளகுட்டிவ நடமாடர எடம்'ன்னுட்டு வூட்டுக்கு கௌம்பினாங்க.

"கோழிய கடிச்சிபோட்டு சாக்கடை உள்ளே கொட்டிவச்சிருந்த பனங்கொட்டைங்க சந்துல போய் கமுக்கமா படுத்துக்குனு இருக்குது. இது தெரியாம மருந்து குடுத்து கூட்டியாந்த மனுசன வாசல்லயே ஒக்கார வச்சிட்டாங்க, பாம்பு எங்க வூட்டு உள்ளே போய்டுச் சோன்ற பயத்துல.

"சிவாவும், பாலண்ணனும் வாசல் எதுருல ஊடு கட்ட பதுவுபோட்டு வைச்சிருந்த பனஓலை, வெருவு எல்லாத்தையும் கலைச்சி போட்டுட்டு தேடினாங்க.

"ஆனா வில்லி வந்த ஒடன சொல்லிவச்சமேரி எறும்பு மொரச்சிங்கெடந்த



படிப்பகம்

www.padippakam.com

கோழிய பாத்துட்டு, நேரா அந்த பாம்பு போன வழிய கண்டு போய், கோமணத்த நல்லா இருக்கிவுட்டுக்கினு இடுப்புல கட்டிவச்சிருந்த மருந்த எடுத்து வாய்ல அடக்கிக்கினு பனங்கொட்டைங்க சந்துல கையவுட்டு லபுக்குனு புடிச்சி அசால்ட்டா இழுத்தார், மொழங்கால் கனத்துக்கு நெளியுது. வில்லிங்களுக்கு பாம்பு போற காலடி கரக்ட்டா தெரியும் அதான் பாம்பு எங்க போனாலும் புடிச்சிடறாங்க.

''அப்பவே வாய நெகிட்டி வெஷப் பல்ல புடிங்கிட்டு வாசல்ல உட்டாரு; மொறம் அகலத்துக்கு படம் எடுத்துக்கினு, பந்து எகுருறமாதிரி மனசன் மேல சீறிக்கினு பாயுது. நானு, மோகனு, கோய்ந்து எல்லாம், பெரியவங்களும் எங்ககூட சுத்தி நின்னுக்கினு வேடிக்க பாத்தோம்.

கொஞ்ச நேரம் வெள்ளாட்டு காட்டிட்டு பேனாகெத்தியால தலையாண்ட ஒரு கீறு கீறி புடிச்சி இஸ்தாரு. அப்பிடியோ சொக்காய கழட்டுன மாதிரி தோலு உரிச்சிக்கினு வந்திச்சி.

''தோல உரிச்சிட்டதும் உக்கரம் ஜாஸ்தி ஆய்டிச்சி வில்லிய எகிறி எகிறி அடிக்கிது. அத புடிச்சி சின்ன பசங்க மேல போடறமாதிரி காட்னதும் நான் ஓடியாந்து எங்க வூட்டு உள்ளே பூந்துக்கின(ன்).

''வூட்ட சுத்தி உப்பு மந்திரிச்சி கொட்டினார். உப்பு மந்திரிச்சி போட்டார்னா அந்த அத்தாண்டி பாம்பு உள்ளே வராது. வில்லி நாகராஜன் கிட்ட சத்தியம் வாங்கிடுவார் அத மீறி உள்ளே வந்தா எந்த பாம்பா இருந்தாலும் செத்துடும்.

''சித்திய கூப்புட்டு 'கோழிகள இங்க கவுக்கவேணாம். கோயி பீ நாத்தத்துக்குத்தான் நல்லபாம்பு வரும் அதால இனிமே அந்த பூர்சமரத்து ஒட்டி தனியா கவுருங்கன்'னுட்டு, பாம்பு தோல கழுத்துல போட்டுக்குனு, உரிச்சிட்ட பாம்ப கைல சுத்தி புடிச்சிக்கினு, வில்லி தெருவுல நடந்து போவும்போது ஊர் ஜெனமே 'வாய்மேல வெரல வச்சிக்கினு பாத்திச்சி. சூராதி சூரனை பார்க்கறமேரி.

● ○ ●

முடிந்த அளவு ஞாபகம் வந்த விசயங்களைக் கூறியதற்கே ஆதிகேசவனைச் சுற்றி சின்னபிள்ளைகள் கூட்டம் கூடிவிட்டது அதை பெருமையுடன் பார்த்து ஒரு மெல்லிய சோகம் கலந்த புன்னகையை வெளியிட்டான் ஆதி.

''ஆமாம்... யாரு டேண்ட டேண்ட டேண்ட மாரியம்மாளே...'' பாட்டுப் பாடி பொம்பள வேஷம் கட்டிக்கினு ஆடுவாரே அவரையா சொல்ற.'' என்ற ஆதியின் மனதுக்குள் வில்லியர் மாரியாத்தா கும்பிடுவதற்காக ஆளாளுக்கு வேஷம் கட்டிக்கொண்டு வருவதும்; ஒத்தை மோளத்தை (பறை) தோளில் மாட்டிக்கொண்டு வீடு வீடாய் சென்று ஆடும் ஆட்டங்களும், வித விதமான ராகங்களில் ஏற்ற இறக்கங்களுடன் பாடும் பாடல்களும் அலை அலையாய் வந்து சென்றன.

''இல்லை சின்னண்ணா மோளம் அடிச்சிக்கினே ஆடுவாரே அசப்புல நம்ம ஏமாறச்சக்கண்ணு பெரிப்பா மாதிரி...'' ஷானு வார்த்தையை இழுத்து முடிப்பதற்குள் கெவுளியைப்போல் உச்சுக்கொட்டினான் ஆதி.

''அய்யய்யோ.... ரெண்டு பேருமே மருந்து குடுப்பாங்க. நான் முன்ன சொல்லல நைனாவுக்கு மருந்து குடுத்தார்னு அவரும்மா, ச்... எத்தினி பேருக்கு பாம்பு வெஷத்துலர்ந்து காப்பாத்தி உசுர்குடுத்த மனுசன் கடைசில பாம்பே அவுருக்கு எமனாய்ட்டு கீதே.''

நுரையீரலுக்குள் உருவான வெப்பக்காற்றை ஸ்.... ஸ்சு என ஊதி வெளியேற்றிவிட்டு மறுபடி நினைவில் நீந்திப் பேச ஆரம்பித்தான் ஆதி.


''நல்லா நெட்ட பனையாட்டம் இன்னா தேககட்டு. மல்லாட்ட கொல்லையில எலிபுடிக்க வந்தார்னா ஊதலான் வச்சி பொகை ஊதி எத்தினி எலி புடிச்சாலும், நாங்க சின்ன பசங்கள்ளாம் சுட்டுதின்ன எலிவேணுன்னு கேட்டா புடிச்சத பூராத்தையும் எங்களாண்ட குடுத்துட்டு மொளைஞ்சி போன நெல்லையும், மல்லாட்டையையும் தான் அள்ளிக்கினு போவார்.

''களத்துமேட்டில் நெல்லோ, மொளகாயோ எது காஞ்சிங்கெடந்தாலும் யாரும் காவலுக்கு இல்லாட்டா கூட கைய வச்சி தொடமாட்டார் நம்பளா மனசு வந்து குடுத்தா உண்டு.

''ச்சே எப்பேர்பட்ட மனுசனுக்கெல்லாம் எப்பிடியெல்லாம் சாவுவந்து தொலைக்குது.... அது செரி ஷானு. எங்க... எப்பிடி செத்தாரு. மருந்து கைல வச்சில்லய்யா...

ஆதியை மறித்து ஷானு வில்லிக்கு நேர்ந்ததைச் சொல்ல ஆரம்பித்தான்.

''நம்ம சின்ன உண்டை பெரிப்பா வூட்டு கயினில்ல மடுவாண்ட... அங்க... அந்த கயினில எலி வள நோண்டும் போது, நோண்ட நோண்ட ஆழமா போய்க்கீது ''எம்மாம்... ஆழன்டா எப்பான்னு'' கையவுட்டு பாத்துக்கீறாரு.





படிப்பகம்

www.padippakam.com

வலைல இருந்த பாம்பு வெடுக்குனு கைய கடிச்சிகிது. அப்ப இவுரு "கைய யாடி கடிக்கிர உன்ன உப்பு மொளகா தடவி சுட்டு கடவாய்ல வச்சி கடிக்காம வுடரதில்லன்னு" புடிச்சி இஸ்துகீறாரு. நல்லா வெட பாம்பு ஒரு ஆள் நீட்டுக்கு கைல நாய் கோத்துபுடுங்கறமாறி புடுங் கிக்கினு தொங்குதாம்."

"....ம்.... டக்குனு மடியில கட்டியி ருந்த பச்செல் மருந்த வாயில போட்டு அடக்கி சிரிச்சிக்கினே என்னையாடி கடிக்கர உன்னை எலியின்னுல்ல நெனச் சேன் இன்னா பன்றன். பார்னு பல்ல ஒடச்சிட்டு தோலை உரிச்சி வேஷ்டியில் வைச்சி மூட்டை கட்டிக்கினு. பாம்ப அடிச்சி கெனத்து மேட்டில் பள்ளந் தோண்டி பொதச்சிட்டு பஸ் ஸ்டேண்டு போவாங்காட்டியும் தலை சுத்த ஆரம் பிச்சிட்டு இருக்குது.

"அய்யய்யோ அப்பறம்..." — ஆதி பதறினான்.

"பயுந்துபோய் ராஜிடாக்கடர் ஊட் டுக்கு ஓடி இந்தமாரி இந்தமாரின்னு வெவரத்த அழமாட்டாத கொரையா சொல்லிகீறாரு. அதுக்கு அந்த டாக்கடர் முன்னூத்தி அம்பது ரூவா ஆவும்ன்னா னாம்.

"ஆனா ஆயிட்டு போவுது வுசு ருக்கு மிஞ்சியின்னா மசுரு சொல்லும்மா " என்று திண்ணையிலிருந்த ஆதி மேடை நுனிக்கே வந்துவிட்டான்.

"பாம்பு தோல், சேறும்மண்ணுமா கெடந்த மொளவிட்ட நெல்லு, மல் லாட்ட எல்லாத்தையும் சேத்து, கிழிஞ்சி போன அழுக்கு வேஷ்ட்டியால கட்டின மூட்டைய செவுத்து ஓரமா வச்சிட்டு, காச ஊட்டுக்குதான் சாமி போய் எடுத் தார்னும்னு வில்லி முடிக்காங்காட்டியும். "போய்யா... போய்... மொதல்ல காச எடுத்துட்டு வான்னு சொன்னானாம் ராஜி"

"அடக் கொடும்... பாவி..." கண் களை மூடி மூடித் திறந்து கொண்டு ஆதி சொன்னதும், ஷானுவும் உணர்ச்சிக் கொந்தளிப்பில் பேசினாள்.

"பாவம் அந்த வில்லி. ராஜி டாக்க டர் கால்ல நெடுஞ்ஜாண்கட்டையா வுழுந்து ரெண்டு காலையும் கெட்டியமா புடிச்சிக்கினு, 'அய்யா என் உசுர காப் பாத்துங்க நான் இப்பிடியே காட்லர்ந்து ஓடியாரன். சின்னதும் சீத்தானுமா ஆறும் பொட்டபுள்ளங்க சாமி, என்னை வுட்டா அதுங்களுக்கு நாதி கெடையாது. மருந்த குடுங்க நான் ஊட்டுக்கு போய் பணத்த கொண்டாந்து தந்துடரேன் உங்க புள்ள குட்டிவளுக்கு கோடி... கோடி... புண்ணி யம் வந்து சேரும்'ன்னு. இன்னான் னாவோ சொல்லி அழுது பொலம்பி கெஞ்சியிருக்கறார். 'வாத்தியார் கூலி யும் வைத்தியர் கூலியும் குடுக்காதவங்க ளுக்கு எமதண்டியில இன்னா தெண்ட னன்னு எனுக்கு தெரியும் சாமின்னு கூட சொல்லி கலங்கியிருக்கார்.

"அந்த கலுவாநெஞ்சுக்காரன் யோவ் இன்னாய்யா உட்டா தத்துவம் எல்லாம் பேசிட்டு இருக்கர காசு இருந்தா குடு இல்லன்னா எடத்தகாலி பண் ணுன்னு கராரா சொல்லி... கழுத்த புடிச்சி வெளிய தள்ளி கதுவசாத்திட்டானாம்.

"கண்டிப்பா நீ ஒன்னாபாரு ராஜி செத்தான்னா அவனுக்கு அட்டகுழி, அர ணகுழி, பாம்பு குழி, பல்லி குழிதான்...." எச்சிலை கூட்டி கூட்டி முழுங்கி அழுத்தி அழுத்தி கூறும்போது ஷானுவின் கண் கள் கலங்கியிருந்தன.

"யார் காந்தி டாக்டரா, வைஜெயந் திமாலாவா நல்லா யோசிச்சி சொல்லு ராஜி டாக்டர் அப்படி செஞ்சிருக்கமாட் டாரே."

"கோடி... கோடி... புண்ணியம் வந்து சேரும்ன்னு, இன்னான்னாவோ சொல்லி அழுது பொலம்பி கெஞ்சியிருக்கிறார். வாத்தியார் கூலியும் வைத்தியர் கூலியும் குடுக்காதவங்களுக்கு எமதண்டியில இன்னா தெண்டனன்னு எனுக்கு தெரியும் சாமி'-ன்னு கூட சொல்லி கலங்கியிருக்கார்.

— இவ்வளவையும் கேட்டபின்பு ஆதி இப்படி கேட்டது ஷானுவுக்கு அள வில்லா கோபத்தை உண்டாக்கியது.

"நான், ராஜி... ராஜின்னு.. படிச்சி படிச்சி சொல்ரன் வெடிய வெடிய ராமா யணம் கேட்ட கதயா இன்னா பேசர நீ" என்று நிறுத்தினாள் ஷானு.

ச்சே. ஒரு டாக்டர்; தாசிகூட செய் யக்கூசுற காரியமல்லவா இவன்லாம் நினைக்க நினைக்க உலைகொதிப்பது போல் பொங்கியது கோபம். இதுநாள் வரை மருத்துவர்கள் மீது ஆதி வைத்தி ருந்த அதீதமரியாதைகள் என்ன ஆன தென்று அவனுக்கே தெரியவில்லை.

"அந்த பொறுக்கி ராஸ்கோலை சும் மாவா வுட்டாங்க ஜனங்க."

"தெற்கசேரி ஜெனங்க மட்டும்...." ஷானு வாயெடுப்பதற்குள் இன்னொரு குரல் எழுந்தது.

"ஆமாம் போய் கீய்.. ச்சிட்டாங்க பணம் இல்லாம எவன்தான் மருந்து குடுப்பான்" கட்டையாக சம்பத்தின் குரல். இவன் எப்ப வந்தான் இங்க என் பது போல ஆதி திரும்பிப் பார்த்தான்.

"டே... செம்போத்து உசுர்டா கால - காலப்புடிச்சி கெஞ்சிக்கீறான். நெனச் சாலே நெஞ்சி அபுக்குன்னுதுடா."

"ஆமாம் பெர்... ரீ... ய உசுர். அவன் எம்மாம் செலவு பண்ணி படிச்சி பட்டம் வாங்கியிருப்பான்."

"....யான்டா டேய்.:. டாக்டருக்கு படிக்கறது ஊர் ஜெனங்களுக்கு உயிர் பிச்ச குடுக்கடா, ஏழை பாழை தாலிய றுத்து எள்ளுந்தர்ப்பனை பண்ரதுக்கு இல்ல."

"போடா டேய் அவன சாவடிச்சது இன்னாவோ டாக்கடர்ன்ர மாதிரி பேசற, ஃபஸ்ட் எயுடு கூட பண்ணிக்க தெரியா தது அந்த வி..ல்..லியோட தப்பு"

'வில்லி' என்ற பெயரை எவ்வளவு முடியுமோ அவ்வளவு கேவலமாக உச்ச ரித்தான் சம்பத் தொடர்ந்து.

"கண்ட கண்ட மருந்தல்லாம் வேற தின்றது திருந்தாத ஜென்மங்க, அது சரி மருந்துன்னா டாக்டருக்கு மட்டும் சும் மாவா கெடக்கிது, நீயெல்லாம் இருந்தா வில்லிய திரும்பி கூட பாத்திருக்கமாட்ட ஏதோ அவரா இருக்கவோ நின்னு பதி லாவது சொன்னாரு"

நிறுத்தி அக்கம்பக்கம் பார்த்து விட்டு,

"நாய்ங்க ஒரு டாக்டர்னுகூட பாக் காம ஊட்டு ஜன்னல் கண்ணாடியெல் லாம் ஒடச்சியிருக்குதுங்க. இன்னாதான் இருந்தாலும் சேரி புத்திய காட்டிருச் சிங்க பார்"

நிறுத்தியதுதான் தாமதம்.

"அந்த நாதாகு படிச்ச புத்திய காட் னதுக்கப்புறம் இவுங்க சேரி புத்திய காட் னதுல இன்னாடா தப்பு. அவன போஸ்ட் கம்பத்துல கட்டி செருப்பெடுத்து சிங்கா ரிச்சியிருக்கணும்டா ஏற... எறங்க... அத செய்யாம வுட்டத்தான் ஜெனங்க தப்பு" என்று வரவோட்டில் போட்ட நெல்மணி களைப்போல் பொறிந்து தள்ளிவிட்டு "இதுக்கு மேல அந்தப் பரதேசி நாய்க்கு பரிஞ்சி பேசன...." பட்டென்று நிறுத்தி சரசரவென்று வீடுபோய்ச் சேர்ந்தான் ஆதிகேசவன்.

இரவு நீண்ட நேரம் ஆதிக்கு தூக் கமே வரவில்லை. சிறுவயதில் இவன் கற்பனை செய்திருந்த டாக்டர்கள் நினை வுத்திரையில் கழுத்திலும் காதிலும் மாட் டிக்கொண்டு பெரிய பெரிய கட்டிடங்



படிப்பகம்

www.padippakam.com

களின் வரண்டாக்களில் இங்கும் அங்கும் ஓடினார்கள்.

"டாக்டருக்கு படிக்கரதுதான்டா ஒலகத்திலயே புண்ணியமான படிப்பு"

"டாக்டருங்க தெய்வத்துக்குச் சமானம்"

"கட்ன பொண்டாட்டிங்கூட படுத்திருந்தாகூட நோவாளி வந்தா எழுந்து வந்து பாக்கணும்னு படிக்கப் போவும் போதே சத்தியவாக்கு வாங்கிக்குவாங்களாம்"

அம்மாவும், அன்னக்கிளி அத்தையும் சிறியவனாய் இருந்தபோது பேசிக்கொண்ட வார்த்தைகள் பாழுங் கிணற்றில் போட்ட கல்லின் ஒலியாய் விட்டு விட்டு ஒலித்தன.

எப்போது தூக்கம் வந்தது என்றே தெரியவில்லை படுபயங்கரமான கனவுகள், ஆதிகேசவன் கழனிக்கு குளிக்க செல்கிறான். அதுவரை மீன்கள் மட்டுமே நீந்திக் கொண்டிருந்த தண்ணீரில் இவன் இறங்கியவுடன் கிணறு முழுக்க தண்ணீர் பாம்புகள் நீந்துகின்றன. திடீரென்று எல்லாவற்றுக்கும் பெரிய பாம்பு ஒன்று சிரித்துக் கொண்டே இவனைத் துரத்துகிறது.

பயந்துபோய் வேகமாய் நீந்தி படியேற முயல்கிறான் கால்கள் தன்னாலேயே பின்னுக்கு இழுக்கின்றனவே தவிர முன்னால் செல்வது கடினமாக இருக்கிறது. ஆனால் பாம்பு மட்டும் சர்.... சர் என்று ராக்கெட் வேகத்தில் பாய்கிறது.

படியேறி எப்படியோ மேலே வந்து மூச்சு விடும்போது பாம்புக்கு இரண்டு பக்கமும் ரெக்கை முளைத்து பறந்து தரைக்கு வந்து உடனே நல்ல பாம்பாக மாறித் துரத்துகிறது. எப்படியும் தப்பிவிடலாம் என்று ஓடும்போது காலில் எட்டி குத்திவிட்டு மீண்டும் சீறுகிறது பாம்பு. சரி ஏதாவது வைத்தியம் பார்க்கலாம் என்று நினைப்பதற்குள் விஷம் ஏறி விழுந்து தான் செத்துவிட்டது போல் ஆன உடன், பட்டென்று கனவில் தொடர்பு அறுந்து ஆதிகேசவன் கண் எதிரிலேயே வில்லி வாயில் நொப்பும் நுரையும் தள்ளி சுருண்டு விழுந்து சாகிறான்.

ராஜி டாக்டர் அலட்சியமாய் திரும்பிச் சென்று கதவடைக்கப் போகிறான் உடனே அலறி துடித்து "டாக்டர் அந்த வில்லிய பாம்பு கடிச்சிடிச்சி காப்பாத்துங்க காசு நான் தரேன் காப்பாத்துங்க" என்று தூக்கக் கலக்கத்திலேயே எழுந்து உட்கார்ந்து கொண்டு கத்தியவுடன் பக்கத்து திண்ணையில் படுத்திருந்த அவன் அம்மா அன்னம்மா "இன்னாடா பையா எங்க.... இன்னா பாம்பு" என்று கூறிக்கொண்டே தட்டுத்தடுமாறி ஓடிவந்து, இவன் கையை காலை பிடித்து உருவி விட்டுக் கொண்டே பதறினாள்.

"இன்னா எப்பா பயந்துகியந்து பூட்டயா" என்று அம்மா கேட்பதைக் கூட உணர முடியாமல் ஆதிகேசவன் "அடப்பாவி.... சாவடிச்சிட்டியே.... ராஜி... வில்லி.... டாக்டர்.... என முணகிக் கொண்டே இருந்தான்.

---

# நிழற்படம்

சின்னம்மாவை பார்க்க குடும்பத்தோடு கிராமத்துக்குப் போயிருந்தேன். திருப்பனந்தாளுக்கும், பந்தநல்லூருக்கும் இடையே இருக்கும் அந்தச் சிறிய கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்களும், ஆதிக்க சாதியினரும் எண்ணிக்கையில் சம அளவு வாழ்கிறார்கள். சமநிலை, எண்ணிக்கையில்தான்.

"தெருவிலே நடக்காதே" என்ற திடலடியான சாதியக் கொடுமைகள் இல்லாவிடினும், குடியானவர்கள் என்று அழைக்கப்படக் கூடியவர்களின் வீட்டிற்குள் தாழ்த்தப்பட்டோர் சந்து வழியாக கொல்லைப் பக்கம் போய்ப் பாத்திரம் கழுவுவது, டீ வாங்கி வந்தால் திண்ணையோடு கால்கள் மரத்துப் போவது போன்ற நுட்பமான சாதியக் கொடுமைகளைப் பார்க்கச் சகிக்கவில்லை.

ஒரு நாள் மனைவியையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புப் பக்கம் போனேன். அங்கே மேய்ந்து கொண்டிருந்த கோழிகள், வைக்கோல் பரப்பில் மல்லாந்து புரண்டு கொண்டிருந்த நாய் குட்டி, பூனை ஆகியவைகள் என் சிறிய மகளை பெரிதும் ஈர்த்தன. அனைத்திற்கும் மேலாக எங்களைக் கண்டவுடன் ஆசையோடு வரவேற்று, அதிர்ச்சி கலந்து உபசரித்த அந்த உண்மையான மனிதர்கள் வாழுமிடம் தினமும் எங்களை அழைத்தது.

அதற்கு பிறகு என் குழந்தை, சின்னம்மா வீட்டை விட அந்த தாழ்த்தப்பட்ட பெண்களின் இடுப்பிலேயே அதிக நேரம் விளையாடியபடியும் அவர்கள் ஆசையோடு வாங்கித் தரும் எலந்த வடை, முறுக்கு, சமாச்சாரங்களில் மனம் லயித்து அவர்களோடு வயலுக்கு, வரப்புக்கென்று சதா அவர்கள் வீட்டுப் பக்கமே குழந்தையின் நாட்டம் இருந்தது. எங்களுக்கும் அப்படியே ஆனது.

இதைக் கண்களால் வேவு பார்த்துக் கொண்டிருந்த பக்கத்து வீட்டுக் கிழவி தாளமுடியாமல் என் சின்னம்மாவிடம் வெடிக்க ஆரம்பித்து விட்டாள். "அந்த புள்ளைங்கதான் வெவரம் இல்லாம சதா காலனில போயி குந்தி கிடக்கு. உனக்குமா நம்ப ஊறு பழக்க வழக்கம் தெரியாது, எம் மவனே ராத்ரி வஞ்சிட்டு கெடந்தான்" - என்று குற்றப் பட்டியலை நீட்டி முழக்கிக் கொண்டிருக்கும் போதே தாழ்த்தப்பட்ட 'காலனி' குழந்தை ஒன்றைத் தூக்கிக் கொண்டு நானும் என் மனைவியும் வீட்டிற்குள் போக கிழவி எங்களை ஜாடை காட்டியபடி சின்னம்மாவை பிடி பிடி என்று பிடித்துக் கொண்டிருந்தாள்.

நாங்கள் ஊருக்கு புறப்படும் நாள் நெருங்கவே, சின்னப்பொண்ணு, சீதா, மல்லிகா இன்னும் தாழ்த்தப்பட்ட குழந்தைகள், பெண்கள் என அனைவரையுமே போட்டோ பிடிக்க வலுக்கட்டாயமாக வரவழைத்திருந்தேன்.

அவர்கள் ஆவலோடு வந்து நிற்பதைப் பார்த்த கிழவிக்கு ஆவேசம் கிளம்பியது. "மூஞ்சியில மாவைப் பூசிகிட்டு போட்டோ புடிக்க வந்துட்டாளுவ லாத்திகிட்டு, ஏன்டீ அனுசுயா அந்த டம்ளர வேர தண்ணி தெளிக்காம உள்ளார எடுத்துட்டு போறியே, உனக்கும் கிறுக்கு வந்துடுச்சிடி வீட்டுக்கார வரட்டும்" கிழவி தான் பாட்டுக்கு கத்துவதை பார்த்து சின்னம்மாவுக்கு சிரிப்பு வந்தது. போட்டோ எடுப்பதற்கு அனைவரையும் ஒழுங்குபடுத்தி நிற்க வைத்து கிளிக் அடிக்க, அனைவர் முகத்திலும் அதைவிடவும் பிரகாசமாய் சிரிப்பு வந்தது.

சின்னப் பொண்ணு மகள் அவசரமாக "அண்ணே போட்டோதான் புடிச்சிங்கலே எனக்கு ஒன்னு தாங்கண்ணே" என்றாள். "கழுவி தாண்டி தருவாங்க" என்றாள் சின்னம்மா. ஒரு கணம் சோர்ந்து போன சின்னப் பொண்ணு மகள் தயக்கத்துடன் கேட்பாள் "யக்கா அதையும் கழுவுவீங்களா?"

— சுடர்விழி



படிப்பகம்

www.padippakam.com

நூல் அறிமுகம்:

# ''பறை - இசைக் கருவி ஓர் ஆய்வு''

பார்ப்பன இசைக்களவை அம்பலப்படுத்தும் பல ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. இசைக் கருவிகளின் களவு குறித்தும் பல ஆய்வுகள் வந்துள்ளன. யாழ் வீணையாக உருமாறியது குறித்த விவாதம் அவற்றில் மிகப் பிரபலமானது. எனினும் ஆய்வாளர்களால் இதுநாள் வரை தீண்டப்படாமலிருந்த இசைக் கருவி தமிழ் மக்களின் தொன்மையான இசைக் கருவியாகிய பறை. இதற்குக் காரணம் சொல்லாமலேயே விளங்கும்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த முனைவர் வளர்மதி, சனவரி, 25, 1997 அன்று, ம.க.இ.க. தஞ்சையில் நடத்திய தமிழ் மக்கள் இசை விழாவில் ''பறையும் தீண்டாமையும்'' என்ற தலைப்பில் வழங்கிய ஆய்வுக் கட்டுரையை மேலும் விரிவாக்கி ''பறை, இசைக்கருவி - ஓர் ஆய்வு'' எனும் நூலாகத் தயாரித்துள்ளார்.

பறை எனும் இசைக் கருவியின் தோற்றம், அதன் பயன்பாடுகள், பறையைக் குறிக்கும் சொற்கள், பலவகையான பறைகள் ஆகியவற்றை இலக்கிய ஆதாரங்களினூடாக நூலின் முதற்பகுதி விளக்குகிறது.

இந்தியாவின் பல பகுதிகளிலும், உலக நாடுகளிலும் தொல்குடி மக்களின் இசைக் கருவியாக பறை இருந்ததையும், இருந்து வருவதையும் நூலின் அடுத்த பகுதி விவரங்களுடன் விளக்குகிறது.

இந்தியா, இலங்கை தவிர வேறு எந்த நாட்டிலும் பறை எனும் கருவியை இசைத்த மக்கள் தீண்டத்தகாதோர் ஆக்கப்படவில்லை என்பதைக் கூறும் நூலாசிரியர், தமிழர் வரலாற்றில் பறையும் தீண்டாமையும் இணைந்த காலம் எதுவாக இருக்கும் என்பதை இலக்கியச் சான்றுகளினூடாக ஆய்வு செய்கிறார்.

பறை என்னும் சொல்லுக்குச் சொல்லுதல், அறிவித்தல் எனப் பல பொருள்கள் உண்டு. பல வகைப்பட்ட தோற்கருவிகளின் பொதுப் பெயராகவும் பறை என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது.

பறை தயாரிக்கும் முறை பற்றியும், இசை நயத்தின் தேவைக்கேற்பப் பயன்படுத்த வேண்டிய விலங்குகளின் தோல் குறித்தும், அவற்றைப் பதப்படுத்தும் முறை குறித்தும் சங்க இலக்கியங்களிலிருந்து காட்டப்பட்டுள்ள சான்றுகள் தமிழ் மக்களின் இசையறிவை மெய்ப்பிக்கும் சான்றுகளாகும்.

வாசிக்கும் முறைகளைச் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சொற்கள் பல



புறநானூறு, அகநானூறு, சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன. இயம்பல் - இயைந்து ஒலித்தல்; கறங்கல் - 'தகதிமி' போன்ற சொற்கட்டினை சுற்றிச் சுற்றி வருமாறு இசைத்தல்; தெளிர்த்தல் - ஒலிக்கூறுகள் சிதறுமாறு அடித்தல்; ஆலித்தல் - அகலமாகி ஒலித்தல்... போன்ற பல சொற்கள் இசை நுட்பத்தை மட்டுமின்றித் தமிழின் மொழி வளத்தையும் காட்டுகின்றன.

தகதிமி, தரிகிட போன்ற தாளக்கட்டுகளால் கொட்டு முறைகள் குறிக்கப்படுகின்ற அதே நேரத்தில், கொட்டு முறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லும் இத்தனை வகையான சொற்கள் இருந்தும் அவை வழக்கொழிந்து, பறையடித்தல், வாசித்தல் போன்ற ஓரிரு சொற்கள் மட்டுமே இன்று வழங்கி வருவது வருத்தமளிக்கிறது.

ஐவகை நிலப் பாகுபாட்டின் அடிப்படையிலும், ஒலி - உருவம் - பயன்பாடு இவற்றை அடிப்படையாகக் கொண்டும் பறைகள் பெயரிடப்பட்டதை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குகிறார் நூலாசிரியர்.

*தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிறருக்கும் இடையிலான தீண்டாமை அடிப்படை-யிலான சாதிய உறவை ஒழிப்பதன் வாயிலாகத் தான் தொன்மையான இசைக்கருவிக்குரிய முழு மரியாதையைப் 'பறை' பெற முடியும்.*

முதலில் வினைச் சொல்லாகவும், பின்னர் இசைக் கருவியைக் குறிக்கும் பெயர்ச் சொல்லாகவும் இருந்த பறை, சமூக உறவுகளின் இலக்கண விதி மாறியபோது - தீண்டாமை நுழைந்தபோது - பெயர் உரிச் சொல்லாகவும் மாறியது. இழிவு, அழுக்கு, கருப்பு என்ற பொருள் தரும் சொல்லாகவும் 'பறை' மாறியது.

பறைக் கோலம் - இழிவான தோற்றம்; பறைத்துணி - அழுக்காடை; பறைப் பருந்து - கரும் பருந்து போன்ற பல சொற்கள் தமிழ் இலக்கியங்களில் நுழைந்ததைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் ஆசிரியர்.

''துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற இந்நான்கு அல்லது குடியும் இல்லை'' - துடி கொட்டுபவன், யாழ் மீட்டுவோன், பறையறைபவன், வெறியாடுபவன் ஆகிய கலைஞர்களைக் காட்டிலும் சிறந்த குடிகள் இல்லை என்று கூறி அவர்களைப் புகழ்ந்துரைக்கிறார் மாங்குடி கிழார் எனும் புலவர்.

வேறொரு சங்க இலக்கியப் பாடலோ (புறம் - 287) ''துடி எறியும் புலைய, ஏறிகோல் கொள்ளும் இழிசின'' என்று பறை கொட்டியவனை இழிபிறப்பாளனாக்குகிறது.

''பழந்தமிழருடைய குடிப்பாகுபாட்டுடன் பார்ப்பனர்களின் வர்ணப் பாகுபாடு கலந்த காலத்தில் தீண்டாமை வேரூன்றத் தொடங்கியுள்ளது'' என்று கூறி சங்கப் பாடல்களை ஆதாரம் காட்டுகிறார் ஆசிரியர். ''சங்க காலம் பொற்காலம்'' என்று நிறுவ விரும்புவோர்க்கு இது சங்கடத்தைத் தரக்கூடும். ஆனால் இனிமேல்தான் நாம் ஒரு பொற்காலத்தைப் படைக்க வேண்டியுள்ளது என்று அதற்காகப் போராடி வருபவர்களுக்குச் சங்கடம் ஏதும் இல்லை.

பறை எனும் இசைக் கருவிக்கும் தீண்டாமைக்கும் என்ன தொடர்பு? ஏற்கனவே குறிப்பிட்ட நால்வகை இசைக் குடிகளுள் பறையர் மட்டுமே தீண்டத்தகாதோராக, பறை மட்டுமே தீண்டத்தகாத கருவியாக ஆனது ஏன்?

பறையைக் காட்டிலும் யாழ் தொழில் நுட்ப ரீதியில் முன்னேறிய இசைக்கருவி என்பதால் இதனை மீட்டிய கலைஞர்கள் சமூகத்தில் ஒப்பீட்டள



படிப்பகம்

www.padippakam.com

வில் உயர் தகுதி பெற்றிருக்கக் கூடுமெனினும், பறையர் தீண்டத் தகாதோரான தற்குக் காரணம் பறை அல்ல. அவை சமூகக் காரணங்களாகும்.

வேளாண் சமூகத்தில் மேட்டுக்குடிகளுக்கு ஏவல் தொழில் செய்த உழைக்கும் மக்கள், ஈமச்சடங்கில் ஏவல் செய்தோர் போன்றவர்கள் புலையர், இழிசினர், உவச்சர், கடைஞர், கடிகையர், பறையர் என்ற சொற்களால் குறிக்கப்பட்டுள்ளனர்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் நீதி நூல்களிலும் புலையர் என்ற சொல் பொய், களவு, இழிவு, ஊன், தீயநெறி போன்ற பொருள்களில் ஆளப்பட்டுள்ளது என வேறு சில ஆய்வுகள் மேற்கோள் காட்டப்படுகின்றன.

வேளாண் சமூகத்தின் அடிமைத் தொழில்களைச் செய்ததனால் இழிசினர் என்று ஒதுக்கப்பட்டனரெனக் கொண்டாலும், பார்ப்பன நெறிக்கெதிராய் என்ன தீயநெறியை அவர்கள் பின்பற்றினர். 'ஊன் உண்ணுதல்' புன்மையானது எப்போது போன்ற கேள்விகளுக்குள் நூலாசிரியர் செல்லவில்லை.

பறை மிக எளிய இசைக் கருவியாயினும், அதன்மீது சுமத்தப்பட்டிருக்கும் தீண்டாமை எனும் சமூகக் கொடுமை மிகவும் சிக்கலான வரலாற்று நிகழ்ச்சிப் போக்கினூடாகத்தான் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது.

மற்றெல்லாக் காலங்களை விடவும் சோழர் காலத்தில்தான் பறையர் இன மக்கள் மிக இழிவாக நடத்தப்பட்டனர் என்பது இரா. பூங்குன்றன் அவர்களின் ஆய்விலிருந்து மேற்கோள் காட்டி விளக்கப்படுகிறது.

திருவாரூரில் சாமிக்கு முன் ''யானையேறும் பெரும்பறையன்'' யானை மீதேறிக் கவரி வீசிச் செல்வது போன்று சில கோயில்களில் அவர்கள் பெற்றிருக்கும் உரிமைகள், ''மேதினி வளரும் சாதி ஒழுக்கமும் நீதி அறமும் பிறழாது'' ஆட்சி நடத்திய சோழ மன்னர்களுக்கும், பிந்தைய ஆட்சியாளர்களுக்கும் எதிராகக் கலகம் செய்து அவர்கள் பெற்றிருக்கக் கூடிய உரிமைகளே யன்றி சாதியச் சமுதாயம் மனமிரங்கி வழங்கிய சலுகைகள் அல்ல.

தொல்குடித் தமிழ்ச் சமுதாயத்தின் கலைஞர்களான பறையர் அடிமைகளாக்கப்பட்டதும், பறை எனும் இசைக் கருவி அடிமையின் கைக் கருவியாக்கப்பட்டதும் இன்றுவரை மாறவில்லை. பறையடிப்பதற்கும் அடிமைத் தொழில் செய்வதற்கும் மறுத்ததற்காக ம.க.இ.க.வின்




ஆதரவாளர் குருமூர்த்தியின் (குருங்குளம், தஞ்சை) கட்டைவிரல் வெட்டப்பட்ட சம்பவத்தை நினைவு கூர்ந்து, பறையர் எனும் சொல் சாதி மக்களைக் குறிக்கும் சொல்லாக இருப்பது ஒழிக்கப்பட்டு இசைவாணர்களைக் குறிக்கும் மரியாதைக்குரிய சொல்லாக மாற வேண்டும் என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

பறை எனும் கருவிக்கு மற்ற இசைக் கருவிகளுக்கு இணையான மதிப்பு அளிக்கப்படுவதுடன், இசை நுணுக்கங்களைப் புகுத்தி, வகுப்புகள் நடத்தி முறையான பறை இசைவாணர்களையும் உருவாக்க வேண்டும் என்று தனது ஆலோசனைகளையும் ஆசிரியர் முன்வைத்துள்ளார்.

திரையிசை உள்ளிட்ட புதிய தேவைகளையொட்டிப் பறை பயன்படுத்தப்பட்டாலும் ஒரு கருவி என்ற முறையில் அது தீண்டத்தகாத கருவியாகவே சமூகத்தில் இன்னமும் கருதப்படுகிறது. எனவே மாட்டுக் கறி தின்பது, தீண்டாமை மறுப்புத் திருமணம் போல பிற சாதியினர் தப்படிப்பதும் ஒரு தீண்டாமை எதிர்ப்பு நடவடிக்கையாகவே உள்ளது. சாதி ஒழிப்பு குறித்துப் பேசும் அமைப்புகளின் அணிகள் இதைச் செய்ய முன்வர வேண்டும். மணவிழாவுக்கு மங்கல வாத்தியம் (நாதசுரம்) - சாவுக்குப் பறை எனும் பார்ப்பனியப் பண்பாட்டை ஒழித்து பறையை மணவிழாவின், மகிழ்ச்சியின் இசைக் கருவியாக்க வேண்டும். சாப்பறையை நிறுத்த வேண்டும்.

**இந்தியா, இலங்கை தவிர வேறு எந்த நாட்டிலும் பறை எனும் கருவியை இசைத்த மக்கள் தீண்டத்தகாதோர் ஆக்கப்படவில்லை என்பதைக் கூறும் நூலாசிரியர், தமிழர் வரலாற்றில் பறையும் தீண்டாமையும் இணைந்த காலம் எதுவாக இருக்கும் என்பதை இலக்கியச் சான்றுகளினூடாக ஆய்வு செய்கிறார்.**

இவை போன்ற பண்பாட்டு ரீதியான நடவடிக்கைகள் பறை எனும் கருவிக்கும் பறையர் அல்லாத பிற மக்களுக்கும் இடையிலான உறவை மாற்றியமைக்கும் முயற்சிகள் மட்டுமே. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிறர்க்கும் இடையிலான தீண்டாமை அடிப்படையிலான சாதிய உறவை ஒழிப்பதன் வாயிலாகத்தான் தொன்மையான இசைக்கருவிக்குரிய முழு மரியாதையைப் 'பறை' பெற முடியும்.

''பைங்கொடிச் சுரை மேற்படர்ந்த பழங்கூரையுடைப் புற்குரம்பைச் சிற்றில்'' என்று நந்தன் வாழ்ந்த புலைச்சேரியை வருணிக்கிறாரே சேக்கிழார், அந்தச் சுரைக்கொடி படர்ந்த பழங்கூரை பல நூற்றாண்டுகளாகியும் மாறவில்லை - பறையைப் போலவே.

''இழி பிறப்பாளன் கருங்கை சிவப்பத்'' தன் வலிமையனைத்தையும் செலுத்தி அரசனுக்காகப் போர்ப்பறை முழக்கியதைக் கூறுகிறது புறநானூறு. கருங்கை மட்டுமின்றிக் கண்களும் சிவக்க போர்ப் பறை முழங்க வேண்டும் - அரசுக்கும், ஆண்டைகளுக்கும், சாதிக்கும் எதிராக.

கருங்கையின் வலிமை பறையின் மீது படிந்த தீண்டாமைப் பூச்சை அடித்து உதிர்க்கும்; பறையின் அதிர்வில் கருங்கையில் பூட்டப்பட்ட விலங்குகள் தெறிக்கும்.

— மருதையன்

---

'பறை
இசைக்கருவி - ஓர் ஆய்வு'
- முனைவர் மு. வளர்மதி

விலை : ரூ. 50.00


வெளியீட்டாளர்:
திருமகள் நிலையம்,
55, வெங்கட் நாராயண சாலை,
தி. நகர், சென்னை - 600 017.

கீழைக்காற்று வெளியீட்டகத்திலும்
இந்நூல் கிடைக்கும்.
முகவரி:
10, அவுலியா சாகிப் தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 2.



படிப்பகம்

www.padippakam.com



# இட்லரின் போப் : திருச்சபையின் பாசிச முகம்

போப் வருகையையொட்டி ஆர். எஸ்.எஸ். கிளப்பிய கிறித்தவ எதிர்ப்பு வெறியை சென்ற இதழில் எழுதினோம். ஆனால் இந்து மதவெறி பாசிஸ்டுகளால் எதிர்க்கப்படும் போப்புகளும் ஹிட்லரின் அபிமானிகளாகவே இருந்தனர் என்பதை அடுத்த இதழில் எழுதுவதாகக் குறிப்பிட்டிருந்தோம். இதோ... இட்லரின் போப்!

கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையின் முதல் வரியே கீழ்க்கண்டவாறுதான் துவங்குகிறது:

''ஐரோப்பாவை ஆட்டுகிறது ஒரு பூதம் - கம்யூனிசம் எனும் பூதம். போப் பாண்டவரும் ஜார் அரசனும்... ஜெர்மன் உளவாளிகளுமாய் பழைய ஐரோப்பாவின் சக்திகளனைத்தும் இந்தப் பூதத்தை ஓட்டுவதற்காகப் புனிதக்கூட்டு சேர்ந்திருக்கின்றன.''

மார்க்சும் எங்கெல்சும் அன்றைய போப் ஒன்பதாம் பயஸ் கடைப்பிடித்த வெறி கொண்ட சோசலிச எதிர்ப்பை அறிக்கையில் இவ்வாறு பதிவு செய்தனர். ஆனால் அதன் பின்னர் வந்த போப் பாண்டவர்கள் அனைவருமே தமது நடத்தையின் மூலம் அறிக்கையின் முதல் வாக்கியத்தை தீர்க்கதரிசனமிக்க பிரகடனமாக்கிவிட்டனர்.

சென்ற மாதம் இந்தியாவிற்கு வந்த தற்போதைய போப் இரண்டாவது ஜான் பால், மறைந்த போப் 12-ஆவது பயஸ் என்பவருக்கு புனிதர் பட்டம் வழங்கத் திட்டமிட்டிருந்தார். அது போலவே தெரசாவுக்கும் புனிதர் பட்டம் வழங்க வாடிகன் திட்டமிட்டுள்ளதை வாசகர்கள் அறிந்திருக்கக் கூடும்.

ஏசுவின் நேரடியான சீடர்கள் அனைவரும் புனிதர்களாகக் (Saints) கருதப்படுகின்றனர். புனிதர் என்று அழைக்கப்படுவோர் ''இறைவனால் தெரிவு செய்யப்பட்டவர்கள்'' என்ற தகுதியை உடையவர்கள். எல்லா போப்பாண்டவர்களும் கூட புனிதர்களாக அறிவிக்கப்பட்டு விடுவதில்லை. ஒருவரைப் புனிதர் என அறிவிக்க அவரது ''தியாகம், சேவை, துறவு மனப்பான்மை, அற்புதங்களை நிகழ்த்தியிருத்தல்'' போன்ற பல ''கடுமையான'' அளவுகோல்களை வாடிகன் வைத்திருக்கிறது.

கத்தோலிக்கத் திருச்சபை வழங்கும் பட்டங்களிலேயே அதியுன்னதமான இந்தப் பட்டத்தை 'போப் 12-வது பயஸ்'க்கு வழங்குவது என்று தற்போதைய போப் முடிவு செய்திருக்கும் நிலையில் ஐரோப்பாவில் வெளிவந்துள்ள ஒரு நூல் கத்தோலிக்கத் திருச்சபையின் முகத்தில் காறி உமிழ்ந்துள்ளது.

''ஹிட்லரின் போப் - 12-ஆவது பயஸின் அந்தரங்க வரலாறு'' எனும் நூலை ஜான் கார்ன்வெல் என்பவர் எழுதியுள்ளார். இவர் நாத்திகரோ, கம்யூனிஸ்டோ அல்ல. விசுவாசமுள்ள கத்தோலிக்கக் கிறித்தவர்.

போப்பையோ, வாடிகனையோ அம்பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இவருக்கு ஆரம்பத்தில் எள்ளளவும் இல்லை. போப் - 12-ஆவது பயஸின் வாழ்க்கை வரலாறு எழுதுவதுதான் இவரது திட்டம். இதற்கான தரவுகளைத் திரட்டுவதற்காக வாடிகனின் ஆவணக் காப்பகத்தைப் பார்வையிட இவர் அனுமதி கோரிய போதும் வாடிகன் நிர்வாகம் தயக்கமின்றி இவருக்கு அனுமதி வழங்கியது. இவரது முந்தைய நூல்கள் எதுவும் திருச்சபைக்கு எதிரானதாக இல்லை என்பதே இதற்குக் காரணம்.

ஹிட்லரின் இரத்தவெறி பிடித்த பாசிச ஆட்சிக்கும், அவன் நடத்திய யூதப் படுகொலைகளுக்கும் போப் - 12-ஆவது பயஸ் நேரடியாகவும் மறைமுகமாகவும் உடந்தையாக இருந்தார் என்பதுதான் இந்நூலாசிரியரின் குற்றச்



படிப்பகம்

www.padippakam.com



சாட்டு.

"வாடிகன் ஆவணங்களைப் படிக்கப் படிக்க நான் தார்மீக ரீதியாகவே நிலை குலைந்து போனேன். இவற்றையெல்லாம் வெளிக் கொண்டு வருவதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை" என்று தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார் கார்ன்வெல்.

ஐரோப்பா முழுவதும் இலட்சக் கணக்கான யூத மக்கள் நாஜிகளால் படுகொலை செய்யப்பட்டபோது அப்போதைய போப்பாண்டவரான 12-ஆவது பயஸ் வாய்திறந்து ஒரே ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்பதை அனைவரும் அறிவர். ஆனால் ஏன் பேசவில்லை என்ற கேள்விக்கான விடை இந்நூலில் தரப்படுகிறது.

12-ஆவது பயஸ் போப் ஆவதற்கு முன்னால் 1930-களில் வாடிகன் அரசின் செயலராக இருந்தார். 1933-இல் ஹிட்லர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி ஜெர்மன் அதிபராவதற்கு இவர் இரகசியமாக உதவினார் என்பதே முதன்மையான குற்றச்சாட்டு.

ஜெர்மன் மக்களில் பெரும்பான்மையினர் புரோட்டஸ்டென்ட் கிறித்தவர்கள். மக்கள் தொகையின் 1/3 பங்கினரான கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மத்தியில் "கத்தோலிக்க மையக் கட்சி" எனும் கட்சி செல்வாக்குப் பெற்றிருந்தது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத ஹிட்லரின் நாஜிக் கட்சி ஆட்சிக்கு வருவதற்கு கிறித்தவ மையக் கட்சி உதவியது. பிறகு ஹிட்லர் அதிபராவதற்கு ஏதுவாக கத்தோலிக்க மையக் கட்சி தன்னைத் தானே கலைத்துக் கொண்டதாகவும் அறிவித்தது. 1933-இல் ஹிட்லருடன் இதற்கான ஒப்பந்தத்தை இறுதியாக்கினார் பயஸ்.

நாஜிக் கட்சியின் கட்டுப்பாடும் உறுதியான கம்யூனிச எதிர்ப்பும் அவரைப் பெரிதும் கவர்ந்துள்ளது. "நாஜிகள் மதப்பற்றுள்ளவர்களல்ல, எனினும் கம்யூனிஸ்டுகளைக் காட்டிலும் நல்லவர்கள் தான். மேலும் ஹிட்லர் ஆட்சியுடன் உறவு வைத்துக் கொள்வதே 'பாவம்' என்று கருத முடியாது" என்று குறிப்பெழுதியிருக்கிறார் 12-ஆவது பயஸ்.

இப்படியொரு நாஜி ஆதரவு நிலையை போப் எடுக்காமல் இருந்திருந்தால், மக்கள் தொகையின் 1/3 பங்குள்ள கத்தோலிக்கர்களை ஹிட்லருக்கு எதிராகத் திருப்பியிருக்க முடியும். பல இலட்சம் யூதர்கள் கொல்லப்படுவதையும் ஓரளவேனும் தடுத்திருக்க முடியும் என்கிறார் நூலாசிரியர்.

மாறாக நடந்ததென்ன? 1939-இல் ஹிட்லரின் எஸ்.எஸ். என்ற கொலைப் படையில் 25 சதவீதம் பேர் கத்தோலிக்கர்களாக இருந்தனர். பெண்கள் குழந்தைகள் உள்ளிட்ட யூதக் கைதிகளை விஷவாயுக் கூடத்தில் அடைத்துக் கொல்வது, ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டு மக்களை சித்திரவதை செய்து கொல்வது போன்றவற்றை இந்த கத்தோலிக்க நாஜிகள் கூசாமல் செய்தனர்.

சாமானிய கத்தோலிக்கர்களை விடுங்கள், ஐரோப்பா முழுவதும் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டபோது, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கத்தோலிக்க குருமார்களும், பல அரசுகளும் போப் 12-ஆவது பயஸிடம் எவ்வளவோ மன்றாடிக் கேட்டுக் கொண்டபோதும் இந்தப் படுகொலைக்கெதிராக ஒரே ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. கண்டனம் தெரிவிக்கா விட்டாலும் வருத்தம் கூடத் தெரிவிக்கவில்லை.

இப்படியும் ஒரு மனிதன் நடந்து கொண்டிருக்க முடியுமா என்று நமக்கு வியப்பு ஏற்படலாம். ஆனால் நூலாசிரியர் அடுத்து விவரிக்கும் சம்பவம் நம் ரத்தத்தை உறையவும் வைக்கிறது - கொதிக்கவும் வைக்கிறது.

1943 அக்டோபரில் ரோம் நகரிலேயே யூதர்களைச் சுற்றி வளைக்கிறது நாஜிப் படை. அடிமாடுகளைக் கொண்டு செல்வதற்கான லாரியில் அவர்கள் ஏற்றப்பட்டு கொலைக் கூடத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள். லாரியின் உள்ளே காவலுக்கு நிற்கின்ற நாஜி

> "நாஜிகள் மதப்பற்றுள்ளவர்களல்ல, எனினும் கம்யூனிஸ்டுகளைக்காட்டிலும்நல்லவர்கள்தான். மேலும் ஹிட்லர் ஆட்சியுடன் உறவு வைத்துக் கொள்வதே 'பாவம்' என்று கருத முடியாது" என்று குறிப்பெழுதியிருக்கிறார். 12-ஆவது பயஸ்.



இராணுவ அதிகாரிகள் அந்தப் புனித நகரத்தை வேடிக்கை பார்க்க வசதியாக, யூதக் கைதிகளின் கைகள் லாரிக்கு வெளியே தொங்க விடப்படுகின்றன. வெளியே தொங்குகின்ற பிஞ்சுக் குழந்தைகளின் கைகள் கடும் குளிரில் நடுங்குகின்றன.

'செயின்ட் பீட்டர்ஸ்' என்று அழைக்கப்படும் போப்பின் அரண்மனை வழியே செல்கிறது இந்த அடிமாட்டு லாரிகளின் ஊர்வலம். மாளிகையின் உள்ளே இருக்கிறார் போப். அப்பொழுதும் அவர் பேசவில்லை.

இந்தக் கிரிமினல் குற்றத்தினை நியாயப்படுத்த என்ன விளக்கம் தர முடியும்? எது சரி, எது தவறு என்று தீர்மானிப்பதற்கான அதிகாரத்தைத் தேவனிடமிருந்து பெறுகிறார்கள் போப்பாண்டவர்கள் என்று கூறப்படுகிறது. எது கிறித்தவ நல்லொழுக்கம் என்பது போப்புக்குத் தெரியாதா?

தெரியாமலென்ன? ஹிட்லரின் போருக்கும் படுகொலைகளுக்கும் எதிராக ஒரு வார்த்தை கூடப் பேசாத போப் - 12-ஆவது பயஸ் இரண்டாம் உலகப் போர் முடிந்த பின், ஹிட்லரை ரசியா தோற்கடித்த பின் சுறுசுறுப்பாகச் செயல்பட்டார்.

கம்யூனிசத்திற்குப் பெருகி வரும் ஆதரவைக் கண்டு பீதியுற்று, உலகெங்கும் உள்ள கத்தோலிக்கர்களை படையாய்த் திரட்டினார். சோசலிச ரசியா 'மனம் திரும்புவதற்காக' உலகம் முழுவதும் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன.

12-ஆவது பயஸின் இந்த கொடூரமான மவுனத்திற்கு இரண்டு காரணங்களைக் கூறுகிறார் நூலாசிரியர். "முதலாவதாக ஹிட்லரைப் போன்றே பயஸும் ஒரு சர்வாதிகாரி. எனவே ஹிட்லரின் உணர்வுகளை அவர் மதித்தார்; ரசித்தார்."



படிப்பகம்

www.padippakam.com

"இரண்டாவதாக ஹிட்லரைப் போன்றே பயஸும் யூத, அராபிய எதிர்ப்பு இனவெறி கொண்டவர். ரசியப் புரட்சியைத் தொடர்ந்து 1919-இல் ஜெர்மனியின் மூனிச் நகரில் நடைபெற்ற தொழிலாளர் எழுச்சிக்குத் தலைமை தாங்கிய மாக்ஸ் லெவியன் என்வரைப் பற்றிக் குறிப்பிடும்போது, "குடிகாரனைப் போலக் கண்கள், வெளிறிய முகம், விகாரமான தோற்றம் கொண்ட அழுக்கு மூட்டையான யூதன், ரசியன்" என்று எழுதுகிறார் 12-ஆவது பயஸ். எனவே ஹிட்லர் யூதர்களைக் கொன்று குவித்ததைக் கூடப் போப் தனது அடிமனதில் ஆதரித்திருப்பார்." - என்கிறார் நூலாசிரியர் கார்ன்வெல்.

தற்போது புனிதராக்கப்படுவதற்காக விண்ணுலகில் காத்திருக்கும் 12-ஆவது பயஸ், மண்ணுலகில் துறவியாக வாழ்ந்திருந்த காலத்தில் விமானப் பயணம், அதிவேகக் கார்ப் பயணம் போன்றவற்றைப் பெரிதும் விரும்பியவராம். ஹாலிவுட் நடிகைகள் பற்றிய கிசுகிசுச் செய்திகளையும் ஆவலுடன் கேட்டுத் தெரிந்து கொள்வாராம்.

போப் - 12-ஆவது பயஸைத் தரிசித்து அவரது புறங்கையைப் பணிந்து முத்தமிட்டு அருளாசி பெற்ற ஒரு ஆங்கிலேயர், "போப்பின் கையில் அதிகாலைப் பனியின் தூய்மையான மணம் வீசியதாகவும், அது புனிதர்களின் உடலிலிருந்து மட்டுமே வீசக்கூடிய நறுமணமாக இருக்கக் கூடும்" என்றும் எழுதி வைத்துள்ளார்.

"கையை முத்தமிடும் பக்தர்களிடமிருந்து கிருமிகள் தொற்றிக் கொள்ளாமலிருப்பதற்காக, மணம் வீசும் கிருமி நாசினித் தைலத்தில் கையை முக்கி எடுத்து விட்டுத் தான் பக்தர்களுக்கு அவர் தரிசனம் தந்திருக்கிறார்" என்று அந்த ரகசியத்தையும் போட்டு உடைக்கிறார் வாடிகன் ஆவணங்களைக் குடைந்த நூலாசிரியர்.

அன்பு, மனித நேயம் போன்ற கிருமிகள் தன்னைத் தொற்றிக் கொண்டால் விளையக் கூடிய அபாயத்தை போப் யோசித்திருப்பார் போலும்! 12-ஆவது பயஸை புனிதராக அறிவிப்பதற்கான 'புனித நறுமணம்' என்ற கடைசி ஆதாரத்தையும் நாறடித்து விட்டார் கார்ன்வெல்.

●○●

தன்னைச் சுற்றிலும் கோடிக் கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்ட போதும் கல்லுளி மங்கனைப் போல மவுனம் சாதித்ததற்கான காரணத்தையும் 12-ஆவது பயஸ் எழுதி வைத்துள்ளார். "ஒரு வேளை தான் ஹிட்லரை எதிர்த்துப் பேசியிருந்தால் கத்தோலிக்கர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும்" என்பதுதான் போப் கூறும் காரணம்.

இந்த விளக்கமே அநீதியானது என்பது ஒருபுறமிருக்க இது உண்மைக்கும் புறம்பானதாகும். ஹிட்லரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான ரசியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் நாஜிகளால் கொல்லப்பட்டவர்களில் கத்தோலிக்கர்களும்தான் அடக்கம்.

நாஜிகள் மீது நடத்தப்பட்ட நூரம்பர்க் விசாரணையில், அவர்களுக்கு உதவியவர்களும் தண்டிக்கப்பட்டார்கள். ஆனால் போப்பின் நடத்தை பரிசீலிக்கப்படவில்லை. ஏனென்றால் கம்யூனிசத்திற்கெதிராக அமெரிக்காவும் பிற ஏகாதிபத்தியங்களும் தொடர்ந்து நடத்திய யுத்தத்திற்கு வாடிகனின் ஆன்மீக அடியாள் படை அவர்களுக்குத் தேவைப்பட்டது. கம்யூனிச எதிர்ப்பு என்ற பொது நோக்கத்திற்காகப் போப்பின் பாவம் மன்னிக்கப்பட்டுவிட்டது.

"கிறித்தவத்தின் மாபெரும் ஞானி (கிறஸ்து), மக்களின் ஆன்மாக்களுக்கு விமோசனம் கோரித் தமது உடம்பைத் தியாகம் செய்தார்; நவீனமான, கல்வியறிவு மிகுந்த ஞானியோ தமது சொந்த ஆன்மாவின் விமோசனத்திற்காக மக்களின் உடம்புகளைத் தியாகம் செய்கிறார்."

தற்போதைய போப்பான இரண்டாவது ஜான் பால் கூட ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட போலந்துக்காரர்தான். இருந்தாலும் தனது கம்யூனிச எதிர்ப்பு 'லட்சியத்தை' அவர் கைவிட்டு விடவில்லை.

போலந்தின் லெக்வாலேசாவை ஆட்சியலமர்த்துவதற்கும், ரசியாவை உடைப்பதற்கும் அமெரிக்காவின் உளவுப் படையாகவே செயல்பட்டது வாடிகன். நிகராகுவாவில் அமெரிக்கக் கூலிப் படைக்கு எதிராகப் போராடி உயிர்நீத்த சான்டினிஸ்டா இளைஞர்களுக்காக பிரார்த்தனை செய்யக்கூட மறுத்தவர் தான் இன்றைய போப். ஆழ்ந்த மதப்பற்றுள்ள தாய்மார்களும், இலட்சக் கணக்கான நிகராகுவா மக்களும் இந்தப் போப்பை விரட்டியடித்த காட்சியெல்லாம் வீடியோப் படமாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பாவிலும், ரசியாவிலும் போலி சோசலிசம் வீழ்ந்த பிறகு, மேற்கத்திய 'சுதந்திரச் சந்தை' வேலையின்மையையும், பட்டினியையுமே அம்மக்களுக்குப் பரிசாக வழங்கியிருக்கிறது. அமெரிக்காவின் மேலாதிக்கமோ இப்போது பச்சையாக சந்தி சிரிக்கிறது.

நிலைமையைக் கணக்கில் கொண்ட போப் இரண்டாவது பால் "நான் கம்யூனிசத்தை எதிர்க்கிறேன் என்பதனால் முதலாளித்துவத்தை ஆதரிக்கிறேன் என்று பொருள் அல்ல; நான் கம்யூனிசத்தை எதிர்த்ததற்குக் காரணம்கூட அதன் பொருளாதாரக் குறைபாடுகளால் அல்ல; அது தனிமனித கவுரவத்தைக் குலைக்கிறது என்பதனால்தான்" என்று மெதுவாகத் தட்டைத் திருப்பிப் போடுகிறார். இது புதிய தந்திரம்.

●○●

"யாரிடமிருந்து காசு வாங்குகிறோம் என்பது பற்றிக் கவலையில்லை. அதை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதே முக்கியம்" என்று கூறி கொலைகார இராணுவ சர்வாதிகாரிகளிடம் நன்கொடை வாங்கிக் கொண்டு அவர்களுக்கு அருளாசி வழங்கியதை நியாயப்படுத்தினார் தெரசா.

"நாஜிகளுடன் உறவு வைத்துக் கொள்வது ஒன்றும் பாவமல்ல" என்று தனது பாசிச ஆதரவை நியாயப்படுத்தினார் போப் - 12-ஆவது பயஸ்.

இந்த இரண்டு பேரும்தான் 'புனிதர்' ஆக்கப்படுவதற்காகக் காத்திருக்கும் 'இறைவனால் தெரிவு செய்யப்பட்ட ஆத்மாக்கள்.'

கிறிஸ்துவுக்கும் கிறித்தவ திருச்சபைக்கும் உள்ள சிறிய வேறுபாட்டை ஒரே வரியில் விளக்கினார் கார்ல் மார்க்ஸ்:

"கிறித்தவத்தின் மாபெரும் ஞானி (கிறிஸ்து), மக்களின் ஆன்மாக்களுக்கு விமோசனம் கோரித் தமது உடம்பைத் தியாகம் செய்தார்; நவீனமான, கல்வியறிவு மிகுந்த ஞானியோ தமது சொந்த ஆன்மாவின் விமோசனத்திற்காக மக்களின் உடம்புகளைத் தியாகம் செய்கிறார்."

— சூரியன்

குறிப்பு: போப்பை அம்பலப்படுத்தியதற்காக ஆர்.எஸ்.எஸ்.-காரர்கள் குதூகலிக்கத் தேவையில்லை. அகில உலக ஹிட்லர் ரசிகர் மன்றத்தின் தலைவரே கோல்வால்கர்தான் என்பதை 'ஞான கங்கை'யைப் படித்துத் தெரிந்து கொள்க.

●



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

ரஷ்யாவோ, சீனாவோ
மரோஸ்காவையும்
மாசேதுங்கையும்
பெற்றெடுக்கவில்லை.

கம்யூனிசம் பெற்றது.

மரோஸ்கா இறந்துவிட்டான்
ஆனால்
நாம் இன்னும்
பிறக்கவே இல்லை
எப்போது பிறக்கலாம்?

— நிதி. கோமேதகம்

## நாளை உலகம்

என் தெருவில்
தொகுதி எம்.எல்.ஏ.
திண்ணையில் எம்.பி.;

சரியாக வரும்
நகரப் பேருந்து
தட்டுப்பாடு இல்லாத
தண்ணீர்க் குழாய், மின்சாரம்;
கனிவுடன் மருந்து போடும்
அரசு மருத்துவர்;
வேலைக்கு ஆள்இன்றி
தேடி அலையும்
வேலை வாய்ப்பு அதிகாரி;
உழுதவன் கணக்கில்
ஆயிரமாய் இலாபம்;

சுத்தமாய் நகரம்,
சுறுசுறுப்பாய் மக்கள்
தவறு கண்டு;
இமை சிவக்கும்
இளைஞன்.

இவை
என் தாய்
என்னைத் தட்டி எழுப்பும் வரை.

— பி. செல்வராஜ்

## வசந்தத்தின் இடி முழக்கம்

இடி முழக்கங்கள் இல்லாதது போல்
தோன்றும் காலமிது
வசந்தங்களின் வழியிழந்து
விடியலின் பூபாளங்கள்

பொய்யாய்ப்
பழங்கதையாய்
மெல்லப் போனதுவாய்
புரட்சியையும் தோன்றச் செய்யும்
புரட்டல்களின் காலமிது.

கல்கத்தாவின் வீதிகளில்
உறைந்த இரத்தத்தில்
உதிரக் கவுச்சியில்
இந்த தேசத்தின் புரட்சி வரலாறு
பொதிந்து கிடக்கிறது.

முதலாளித்துவம்
மார்க்கண்டேயவரம் பெற்றதாய்
மறுபடியும் மறுபடியும்
உச்சாடனங்கள்!

நெரிக்கப்பட்ட குரல் வளைகளிலிருந்து
எழும்பிக் கொண்டிருக்கின்றன
சொற்கள் -
இந்த முறை
வசந்தம் வந்தே தீரும்.

— அரசு

## இயங்க மறுக்கும் இலக்கிய மனங்களோடு கொஞ்ச நேரம்

பொதுவாய்ப் பேசினால்
புரட்சிக்குக் கூட
ரசிகர் மன்றங்கள் கூடும்.

கொஞ்சம் குறிப்பாய்ப்
பேசுவோமே.

எந்தக் கவிதை நான் பாட
கண்ணில் தெரியும் பூக்களையா
காலில் குத்தும் முட்களையா
இலக்கியத் தேனீக்களுக்கு
எங்களிடம் சரக்கில்லை.

முதலில்
கவிதைகளைக் காயப்படுத்துவோம்
உள்ளேயிருப்பது
ரத்தமா, சீழா என்ற
ரகசியம் தெரியும் அப்போது.

அசை போட்டாலே
போதுமென்றால்
இங்கு மாடுகள் கூட
மரபுக் கவிஞர்கள்.

வார்த்தைகளை அசைபோட்டல்ல
வாழ்க்கையை அசைபோட்டு
வரட்டும் புதுக்கவிதை.

●

எல்லா இன்பங்களையும்
சாதாரணமாக்கிவிடுகிறது
கம்யூனிஸ்டாய் வாழ்வதன்
இன்பம்.

எல்லாத் துன்பங்களையும்
சாதாரணமாக்கிவிடும்
கம்யூனிச உணர்வை
இழப்பதன் துன்பம்.

சிலருக்குக்
கம்யூனிசம் பிடிக்கிறது
கட்சி பிடிக்கவில்லை.
தேனைப் பிடிக்கிறது
மகரந்தக் கிண்ணம்
பிடிக்கவில்லை.

●

எல்லாம் சரி
எப்போது வரும் புரட்சி
எப்போது வரும் மழை
என்பது போல
மலைக்கிறார்கள் சிலர்

வானில் இடிபாடுகள்
இருந்தால் மட்டும் போதாது
வளி மண்டலத்தின்
வலுவான இயக்கமின்றி
வராது மழையும்

வாழ்க்கையில்
இடிபாடுகள் இருந்தால்
மட்டும் போதாது
வலுவான இயக்கமின்றி
வராது புரட்சி கூட.
வாருங்கள் இயக்கத்திற்கு!

— துரை. சண்முகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM (TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA UNDER NO. 42647/87
Regd. No. TN/Chief PMG-25 / 99
www.padippakam.com

பிப்ரவரி - 5, 2000
சனிக்கிழமை
தஞ்சை -
திலகர் திடலில்



மருது '93

காலை முதல்
மாலை வரை
கருத்தரங்கம்

மாலை முதல்
கலை நிகழ்ச்சிகள்
இசை நிகழ்ச்சிகள்

பார்ப்பனீயத்தின் பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிரான போர் முழக்கம்

# தமிழ் மக்கள் இசை விழா

## * ஏழாம் ஆண்டு *

அன்பார்ந்த உழைக்கும் மக்களே,

தமிழ் மக்கள் இசைவிழாவிற்கு இது ஏழாமாண்டு, தமிழ் மக்கள் இசை மரபை மீட்கவும், அதனை மக்கள் விடுதலைக்கான கருவியாக்கி மீட்டவும் மேற்கொள்ளப்படும் முயற்சியே தமிழ் மக்கள் இசை விழா.

தமிழிசையைத் திருடி, கருநாடக இசையென்று பெயர் சூட்டி, அதற்குப் பார்ப்பன இந்து மதச்சார்பு மூலாம் பூசி, அந்தத் திசையிலேயே அதை வளர்த்து ''இதுதான் தமிழகத்தின் இசை'' என்று சாதிக்கின்ற மோசடிக் கெதிரான போராட்டமே தமிழ் மக்கள் இசை விழா.

இந்த இசைக்களவு என்பது வெறும் இசைத்துறை விவகாரமல்ல; இதற்குப் பின்னே ஓர் அரசியல் இருக்கிறது. தமிழிசை இயக்கத்தின் தோற்றத்திற்கும் திராவிட இயக்கத்திற்கும் இருந்த உறவை அனைவரும் அறிவர். தமிழிசை இயக்கம் பார்ப்பனியத்துடன் கூட்டுச் சேர்ந்து கொண்டதும், திராவிட இயக்கத்தின் அரசியல் சமரசமும் தொடர்பற்ற தனித்தனி விசயங்களல்ல.

இப்போது பெரியாரின் வழித்தோன்றல்கள், திராவிட இயக்கத்தின் வாரிசுகள் எனப்படுவோரெல்லாம் இந்துமத வெறியர்களின் அரசவையில் அமைச்சர்களாகி விட்டார்கள்.

''ஆட்சி அவாளிடம் இருந்தாலும் அமைச்சர் பதவி நம்மாளிடம் இருக்கிறது; அதைப் பயன்படுத்தித் தமிழ் வளர்க்கலாம், தமிழகத்தை வளர்க்கலாம், இன்னும் என்னென்னவோ வளர்க்கலாம்'' என்றொரு மாயை உருவாக்கப்படுகிறது. ''அரசியல் வேறு - இசை வேறு, அரசியலில் கூட்டு வைப்பதன் காரணமாக அவாளிடம் சரணடைந்து விட்டதாகப் பொருளல்ல'' என்றும் அவர்கள் சொல்லக் கூடும்.

இசையை மக்கள் விடுதலைக்கான கருவியாகக் கருதுபவர்கள் அரசியலும் - இசையும் வேறு வேறென்று ஏற்கவியலாது.

அரசியலில் இந்துத்துவத்தின் கூட்டாளிகள், பண்பாட்டில் பார்ப்பனீயத்தின் பகையாளிகளாக இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது ஏமாளித்தனம். இந்துத்துவத்தின் தாளத்திற்கு வேண்டுமானால் அவர்கள் தமிழ்ப்பாட்டுப் பாடலாம்.

ஆனால் நமக்குத் தேவைப்படுவது தமிழ் மக்களின் உரிமை கோரும் பாடல், விடுதலை உணர்வின் இசை, தமிழ் மக்களிசை!

அனைவரும் வாருங்கள்!

ஆதரவு தாருங்கள்!

மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு.

தொடர்புக்கு: காளியப்பன், எண்:1, அண்ணாநகர், சிவாஜிநகர் (வழி), தஞ்சாவூர் - 613 001. தொலைபேசி எண்: 04362-32922

படிப்பகம்